


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 214 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 02 – வெள்ளிக்கிழமை 15 மார்ச் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 214 : Thiruvalluvar Year - 2055 - Panguni 02 - Friday 15 March 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## பிரிவினை எண்ணம் எங்களுக்கு இல்லை! நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா!

# தேச பக்தி பற்றி எங்களுக்குப் போதிக்கவேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை!

## வடசென்னை வளர்ச்சித்திட்ட விரிவாக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.3.2024) சென்னை, தங்க சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை பகுதிக்கு விரிவான வளர்ச்சியை உறுதி செய்திடும் வகையில் வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ் பதினோரு துறைகளை உள்ளடக்கி 4181.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 219 திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, வடசென்னை வளர்ச்சித் திட்டத்திற்கான இலச்சினையை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு, மா. சுப்பிரமணியன், பி. கே. சேகர்பாபு , அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சி. வி. கணேசன், மேயர் ஆர், பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மரு. கலாநிதி வீராசாமி, இரா, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி. சேகர், திரு, தாயகம் கவி, இ. பரந்தாமன், ஜான் எபிநேசர், அ.வெற்றியழகன், ஐட்ரீம் மூர்த்தி, ஜோசப் சாமுவேல், துணை துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனையர் தட கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர் அன்கள் மிஸ்ரா, அரசு துறைச் செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை,மார்ச்.15–**

**‘பிரிவினை எண்ணம் எங்களுக்கு இல்லை! நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா!’ என்றும் ‘தேச பக்தி பற்றி எங்களுக்கு போதிக்கவேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை!’ எனவும் வடசென்னை வளர்ச்சித்திட்ட விரிவாக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

நம்முடைய அரசு, இப்படி சென்னையை உயர்த்த நாள்தோறும் புதிய புதிய திட்டங்களாக நிறைவேற்றுகிறது. ஆனால், கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் சென்னை எப்படி வெள்ளத்தில் முழ்கியது? சென்னை மட்டுமா! ஒட்டு மொத்த தமிழ்நாட்டின் நிதிநிலைமையும் மூழ்கடித்துவிட்டு சென்றார்கள். அவர்களைப் போன்று தான் 10 ஆண்டு கால பா.ஜ.க ஆட்சியும் சென்னைக்கு எதுவும் செய்யவில்லை. தமிழ்நாட்டிற்கும் ஒன்றும் செய்யவில்லை.

ஆனால், நாளைக்கு பிரதமர் மோடி கன்னியாகுமரி வரப்போகிறார். எதற்காக வரப் போகிறார்? தமிழ்நாட்டிற்கான சிறப்புத் திட்டங்களை உருவாக்கித் தர வரப் போகிறாறா? இல்லை, ஓட்டு கேட்டு வரப் போகிறார். ஓட்டு கேட்டு வருவதை நான் தவறு என்று சொல்ல விரும்பவில்லை.

சென்னை வெள்ளத்தில் மிதந்த போது, மக்களுக்கு ஆறுதல் கூற வராத பிரதமர், தூத்துக்குடியும், கன்னியாகுமரியும் வெள்ளத்தில் மிதந்த போது மக்களைப் பார்க்க வராத பிரதமர், ஓட்டு கேட்டு மட்டும் வருவது நியாயமாக இருக்கிறதா? குஜராத் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது, அன்றைய தினமே ஹெலிகாப்டரில் சென்று பார்த்தாரே! மறுநாளே, நிவாரண நிதி கொடுத்தாரே! குஜராத்திற்கு ஏன் கொடுத்தீர்கள் என்று நான் கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கு ஏன் தரவில்லை என்று தான் கேட்கிறேன். குஜராத்துக்கு அன்றைய தினமே நிதி தருவதும், தமிழ்நாட்டிற்கு மூன்று மாதம் சென்ற பிறகும் நிதி தர மனதில்லாமல் போவதும் ஏன்? இதை கேட்டால், நம்மை பிரிவினைவாதி என்று அடையாளம் காட்டுகிறார்கள். நம்மை பிரிவினைவாதி போல் பேசுகிறார்கள்.

### மற்ற மாநிலங்களுக்கு நிதி – தமிழ்நாட்டிற்கு ஒன்றுமில்லை!

அது மட்டுமா! சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்டப் பணி! நாம் ஆட்சிக்கு வந்த உடனே, பிரதமரை நான் முதல் முறையாக பார்க்கச் சென்றபோது, மெட்ரோ பணிக்கு நிதி கேட்டேன். இப்போது, 3 வருடம் ஆகிறது, என்ன நிலைமை? நமக்கு அடுத்து கேட்ட மாநிலங்களுக்கு வழங்குகிறார்கள். ஆனால், நமக்கு ஒன்றும் வரவில்லை! தரவில்லை!

நாம் கேட்டுக் கொண்டே இருப்பது என்ன? ஒன்றிய அரசுக்கு அதிக வரி வருவாய் எங்கிருந்து போகிறது? நம்முடைய தமிழ்நாட்டில் இருந்து போகிறது. நம்முடைய பணம் தான் போகிறது. ஆனால், அதற்கேற்ற மாதிரி திருப்பி தருகிறார்களா? நாம் ஒரு ரூபாய் கொடுத்தால், 28 பைசா தான் மறுபடியும் நமக்கு வருகிறது! அதையாவது ஒழுங்காக கொடுக்கிறார்களா? இல்லை!

நிதி கேட்டு கடிதம் எழுதுகிறோம்! நம்முடைய எம்.பி.க்கள் எல்லாம், நிதி கொடுங்கள் என்று நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்கிறார்கள். அதற்கு பிறகு தான் அந்த 28 பைசாவையும் கொடுக்கிறார்கள். இதை சொன்னால் நாம் பிரிவினை பேசுகிறோமா!

மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களே! பாரதப் பிரதமர் அவர்களே! பிரிவினை எண்ணம் எங்களுக்கு இல்லை. ஒரு கண்ணில் வெண்ணெய்யும், மற்றொரு கண்ணில் சுண்ணாம்பும் ஏன் என்று தான் கேட்கிறோம். நான் அழுத்தம் திருத்தமாக சொல்வது, தேசபக்தியை பற்றி எங்களுக்கு யாரும் போதிக்க வேண்டியது அவசியம் இல்லை. நாட்டுப் பற்று பற்றி எங்களுக்கு யாரும் வகுப்பு எடுக்க வேண்டிய அவசியமே கிடையாது.

சீன நாட்டில் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது, 1962ஆம் ஆண்டு, திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டு, இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்று அறிவித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்!

### பிரதமர் ஓட்டு கேட்க வருவது நியாயமா?

**“சென்னை வெள்ளத்தில் மிதந்த போது, மக்களுக்கு ஆறுதல் கூற வராத பிரதமர், தூத்துக்குடியும், கன்னியாகுமரியும் வெள்ளத்தில் மிதந்த போது மக்களைப் பார்க்க வராத பிரதமர், ஓட்டு கேட்டு மட்டும் வருவது நியாயமாக இருக்கிறதா? குஜராத் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட போது, அன்றைய தினமே ஹெலிகாப்டரில் சென்று பார்த்தாரே! மறுநாளே, நிவாரண நிதி கொடுத்தாரே! குஜராத்திற்கு ஏன் கொடுத்தீர்கள் என்று நான் கேட்கவில்லை. தமிழ்நாட்டுக்கு ஏன் தரவில்லை என்று தான் கேட்கிறேன்.”**

1971 ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்திய போது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்பை கண்டித்து, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி, 1972ஆம் ஆண்டு பாகிஸ்தான் போரின் போது, அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களும், நாட்டுக்காக, நாட்டின் பாதுகாப்புக்காக ஆறு கோடி ரூபாய் நிதி வழங்கியவர் தமிழக முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள்!

அன்றைய தினம், அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை எவ்வளவு தெரியுமா? மொத்தமே 25 கோடி! இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களும் மொத்தமாக வழங்கிய தொகை 25 கோடி! அதில் 6 கோடியை வழங்கியது திராவிட முன்னேற்றக் கழக அரசு! அந்தப் போரில், வீரமரணம் அடைந்த இராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு, கலைஞரின் அரசு! அதுமட்டுமல்ல, 1999ஆம் ஆண்டு கார்கில் போரின் போது, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம், மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசும் முதல்வர் கலைஞரின் அரசு தான்! இந்தியாவைக் காப்பதற்கு எங்களை நாங்கள் ஒப்படைத்துக் கொண்டவர்கள் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். தமிழ்நாட்டில் கால் பதித்து, இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக குரல் கொடுத்து வருபவர்கள் நாங்கள்!

### இந்தியா வளம்பெற உழைத்துக் கொண்டிருக்கிறோம்!

இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை வளர்த்தெடுத்த நாங்கள், உலகின் தலைசிறந்த கூட்டாட்சி நாடாக, மக்களாட்சி நாடாக இந்தியா வளர்ந்து, வளம் பெற வேண்டும் என்பதற்காகத் தான் உழைத்துக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டிற்கு எந்த நன்மையும் செய்யாத உங்களுக்கு, தமிழ்நாட்டு மக்களின் ஓட்டு மட்டும் வேண்டுமா? இது என்ன நியாயம்?

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் கேட்கிறார்கள்? பத்து ஆண்டுகளில் என்ன சிறப்புத் திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்திருக்கிறீர்கள். ”பதில் கூறுங்கள் பிரதமர் அவர்களே கேட்கிறார்கள், மக்கள் கேட்கிறார்கள், நாங்கள் கேட்கவில்லை. மக்கள் கேட்கிறார்கள். தமிழ்நாட்டை சீரழித்த அ.தி.மு.கவையும், தமிழ்நாட்டை கண்டுகொள்ளாத ஒன்றிய பா.ஜ.கவையும் மக்கள் நிராகரிக்க தயாராகிவிட்டார்கள்! அதுதான் இந்தக் காட்சி, இந்தக் சாட்சி. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடும் திராவிட மாடல் அரசும், உங்களுக்காக எந்நாளும் உழைக்க இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும் இருக்கிறேன்!

இன்றைக்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்ற வடசென்னை வளர்ச்சித் திட்டங்கள் அதன் அடையாளம் தான்! தமிழ்நாட்டின் வளர்ச்சியின் தொடர்ச்சியாக, இந்தியாவையும் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு தமிழ்நாட்டு மக்களான நமக்கு வந்து சேர்ந்திருக்கிறது. அதற்கு துணை நிற்க, உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன். தமிழ்நாட்டை வளர்ப்போம்! இந்தியாவை காப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தி.மு.கழக ஆட்சியில் திரும்பிய பக்கமெல்லாம் திட்டங்கள் - வளர்ச்சிகள்!

# இந்தியாவே சென்னையை திரும்பிப் பார்க்கிறது!

## சாதனைகளை விளக்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

ஒரு சில அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றபோது தான் கூடுதல் மகிழ்ச்சி ஏற்படும். அதேபோன்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நிகழ்ச்சி தான் இது!

”வடசென்னை வளர்ச்சி திட்டம்! இந்தத் திட்டத்தின் பெயரே போதும், நம்முடைய திராவிட மாடல் அரசு இந்தப் பகுதியை எவ்வளவு முக்கியமாக நினைக்கிறது என்பதற்கு! இது ஒரு காரணம்.

### எல்லோர்க்கும் எல்லாம் என்பதே வளர்ச்சி!

தி.மு.க. உருவானதும் வட சென்னையில் தான்; முதலமைச்சரான என்னை, சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்ததும், இந்த வட சென்னை கொளத்தூர் தொகுதி மக்கள்தான்! எனவேதான், எம்.எல்.ஏ.,வாக, மேயராக, அமைச்சராக, துணை முதலமைச்சராக, இப்போது, முதலமைச்சராக சிறப்பு கவனம் செலுத்தி, வளர்ச்சி என்பது, ‘எல்லார்க்கும் எல்லாம்’ என இருக்க வேண்டும் என்று திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறேன்.

‘செயல்பாபு’ என்று என்னால் அழைக்கப்படுகின்ற அமைச்சர் சேகர்பாபு, மிகக் குறுகிய காலத்தில் இந்த விழாவை மிகப்பிரமாண்டமாக ஏற்பாடு செய்திருக்கிறார்.

இந்து சமய அறநிலையத் துறையில், எப்படி முத்திரை பதிக்கிறாரோ, அதேபோல, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் திட்டங்களாலும் முத்திரை பதிக்கிறார் என்பதற்கு இந்த விழாவே சான்று!

இங்கு அமர்ந்திருக்கும், நம்முடைய அமைச்சர் நேரு, அமைச்சர் சேகர்பாபு, மேயர், துணை மேயர், அதிகாரிகள் என எல்லோருக்கும் நான் கூறிக் கொள்வது, சென்னை மாநகரை, இந்தியாவின் தலைசிறந்த மாநகரமாக, நவீன நகரமாக உருவாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் உங்களிடம் ஒப்படைத்திருக்கிறேன்.

அந்தப் பணியை மிகச் சிறப்பாக செய்ய வேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கவில்லை, கட்டளை இடுகிறேன்! இதைச் சொல்வது மட்டுமல்ல, நானே அதைத் தொடர்ந்து கண்காணிப்பேன் என்பதும் உங்களுக்கு தெரியும்!

### மக்களால் தேர்வான முதல் மேயர் நான்!

நம் தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா! மெட்ராஸுக்கு சென்னை என்று பெயர் சூட்டியவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்! அப்படிப்பட்ட சென்னை மாநகரில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர் என்ற பெருமை எனக்கு உண்டு! 500 ஆண்டுகள் பழமைவாய்ந்த சென்னை மாநகரத்தை நவீனமாக்கியதில் பெரும் பங்கு திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு.

இன்றைய சென்னையை வலம் வந்து பாருங்கள். நீங்கள் பார்க்கின்ற எல்லா வளர்ச்சிப் பணிகளுமே தி.மு.க. உருவாக்கியதுதான்!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 15-03-2024

# பா.ஜ.க.வின் ஊழல் முகம் கிழிகிறது

பா.ஜ.க.வின் முகத்திரையைக் கிழித்து அதன் ஊழல் முகத்தை அம்பலப்படுத்தி விட்டது உச்சநீதிமன்றம்.

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான வழக்கு, உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அரசியல் சாசன அமர்வில் விசாரணை நடைபெற்று வருகிறது. இதில் வசமாக சிக்கிக் கொண்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஊழலை சட்டபூர்வமாக ஆக்கிக் கொள்வதில் கைதேர்ந்தவர்கள் பா.ஜ.க.வினர். தேர்தல் பத்திரங்களின் மூலமாக தனது கட்சிக்கு அதிகப்படியான நிதியைத் திரட்டிக் கொள்வதை வழக்கமாக வைத்துள்ளது பா.ஜ.க.

2017 முதல் 22 வரையிலான காலக்கட்டத்தில் மட்டும் 5 ஆயிரத்து 272 கோடி ரூபாயைத் திரட்டி இருக்கிறது பா.ஜ.க. இது கருப்புப் பணத்தை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் எழுந்தபோதும் பா.ஜ.க. அதனை நியாயப்படுத்தி வந்தது. இந்தத் தேர்தல் பத்திர முறை சட்டவிரோதமானது என்று கூறி அதனைத் தடை செய்ய உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த பிப்ரவரி 15 அன்று உச்சநீதிமன்றம் இந்தத் தேர்தல் பத்திர முறையையே தடை செய்து விட்டது.

**“எங்களுக்கு யார் நன்கொடைகள் வழங்கியது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை” என்ற ‘ஊழல் மலிந்த’ பதிலை ஒன்றிய பா.ஜ.க. அரசு உச்சநீதிமன்றத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சொல்லி இருந்தது. இதுதான் பா.ஜ.க. அரசின் உண்மையான ஊழல் முகம் ஆகும்.**

ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா அப்போது என்ன சொன்னார் தெரியுமா?

**“நன்கொடை யார் வழங்கியுள்ளனர் என்பது அதனைப் பெறும் கட்சிக்கு மட்டுமே தெரியும். மற்ற கட்சிகளுக்குத் தெரியாமல் ரகசியம் காப்பதுதான் இந்தத் திட்டம்” என்று குறிப்பிட்டார். அப்போது, குறுக்கிட்ட தலைமை நீதிபதி எஸ்.ஏ.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, “அப்படியானால் வாக்காளர்களின் உரிமை என்ன? ஏன் நன்கொடை விபரங்களை வாக்காளர்கள் தெரிந்துகொள்ளக் கூடாது?” என்று கேள்வி எழுப்பினர்.**

**தேர்தல் ஆணைய வழக்கறிஞரிடமும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள். “தேர்தல் பத்திர நடைமுறையால் பாதிப்பு எதுவும் உள்ளதா? அது குறித்து ஆய்வுகள் எதுவும் நடத்தப்பட்டதா? இதுவரை பெறப்பட்டுள்ள நன்கொடை தொகை எவ்வளவு? என்பது உள்பட பல கேள்விகளுக்குத் தேர்தல் ஆணையம் உரிய பதிலை அளிக்கவில்லை” என நீதிபதிகள் தெரிவித்தனர்.**

ஒன்றிய அரசின் அட்டர்னி ஜெனரல் வாதிடும் போது, “பொதுமக்கள் எதை வேண்டுமானாலும் எதைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் நிலை இருக்கக் கூடாது. நியாயமான கட்டுப்பாடுகள் தேவை” என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

**“சில நிறுவனங்கள் மொத்த வருவாயையும் அரசியல் நன்கொடையாக வழங்குவதை அனுமதிப்பது ஏன்? முன்பு நிகர லாபத்தில் ஒரு பகுதிதான் நன்கொடையாக வழங்க முடியும் என்ற விதிமுறை இருந்தது. தற்போது லாபம் இல்லாத நிறுவனங்கள் கூட மொத்த வருவாயையும் நன்கொடையாக வழங்க முடியும் என்று மாற்றப்பட்டுள்ளது. நிறுவனம் நடத்துவது நன்கொடை வழங்குவதற்காக அல்ல. இதனை சரிசெய்ய நிறுவனங்கள் சட்டத்தில் திருத்தம் தேவை. இதுபோன்ற பிரச்சினைகளை சரிசெய்ய ஒரு சமநிலையான நன்கொடை திட்டத்தை உருவாக்கலாம். அது எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை அரசும், நாடாளுமன்றமும்தான் முடிவு செய்ய வேண்டும்” என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். இவை அனைத்தும் விசாரணையின் போது நடந்தவை ஆகும்.**

பிப்ரவரி 15 ஆம் தேதி ஒட்டுமொத்தமாக முற்றுப்புள்ளி வைத்தது உச்சநீதிமன்றம். மார்ச் 6 ஆம் தேதிக்குள் 2019 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட அனைத்து தேர்தல் பத்திரங்கள் தொடர்பான விபரங்களையும் தேர்தல் ஆணையத்திடம் எஸ்.பி.ஐ. வங்கி வழங்க வேண்டும் என்று சொன்னது உச்சநீதிமன்றம். அப்படிக் கொடுத்தால் தங்களது ஊழல் முகம் அம்பலமாகி விடும் என பயந்தது பா.ஜ.க. - எனவே இழுத்தடிக்கப் பார்த்தார்கள். சூன் 30 வரை கால அவகாசம் வேண்டும் என்றார்கள். அதற்குள் தேர்தலை முடித்துவிடத் திட்டம். ஆனால் இதனையும் உச்சநீதிமன்றம் ஏற்கவில்லை.

“பிப்ரவரி 15 முதல் மார்ச் 6 வரை நீங்கள் என்ன செய்து கொண்டு இருந்தீர்கள்?” என்று நாக்கைப் பிடுங்குவதைப் போல கேட்டு விட்டார்கள் நீதிபதிகள். **“கடந்த 26 நாட்களாக எஸ்.பி.ஐ. என்ன செய்துகொண்டிருந்தது? அனைத்து விவரங்களும் கைவசம் இருக்கும் போது ஏன் அவகாசம்? தீர்ப்பில் கூறப்பட்டதை அப்படியே செயல்படுத்த வேண்டியது தானே? கடந்த 26 நாட்களில் 10,000 தகவல்களையாவது சேகரித்திருக்கலாம். இடைக்கால உத்தரவு பிறப்பித்த போது சீல்டு கவரில் வழங்கப்பட்ட ஆவணங்களை அப்படியே தேர்தல் ஆணையத்திற்கு வழங்க வேண்டியதுதானே? நாட்டின் மிகப் பெரிய வங்கியால் தேர்தல் பத்திரங்கள் குறித்த தகவல்களை விரைவில் சேகரித்து வழங்க இயலாதா?”** என்று சரமாரியாகக் கேள்வி எழுப்பினார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.

பத்திர விபரங்களை 12 ஆம் தேதி மாலைக்குள் தேர்தல் பத்திர விபரங்களை வெளியிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. எஸ்.பி.ஐ.க்கு வேறு வழியில்லை. விபரங்களை தேர்தல்ஆணையத்திடம்ஒப்படைத்துவிட்டதுஎஸ்.பி.ஐ. உச்சநீதிமன்றம் உத்தரவுப் படி தேர்தல் பத்திரங்கள் வாங்கியவர்களின் விபரங்களை தேர்தல்ஆணையம்மார்ச்15ஆம்தேதி மாலை 5 மணிக்குள் இணையத் தளத்தில் வெளியிட வேண்டும்.

**2017 முதல் 2022 வரையிலான ஆண்டுகளில் பா.ஜ.க. மட்டும் ரூ.5272 கோடி நன்கொடை பெற்றுள்ளது. இது மொத்த நிதியில் 58 சதவிகிதம் ஆகும். இதனால்தான் மக்கள் தெரிந்துகொள்ளக் கூடாது என்கிறது பா.ஜ.க. இணையத்தளத்தில் இத்தகவல்கள் வெளியானால் பா.ஜ.க.வின் ஊழல் முகத்திரை கிழிந்துவிடும்.**

●●



சென்னை கிழக்கு மாவட்ட திமுக துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் ரம்ஜான் பண்டிகை முன்னிட்டு 3000 இஸ்லாமியப் பெருமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் உதவி தொகையை விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், துறைமுகம் பொறுப்பாளர் பிரபு, பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ், கவுன்சிலர்கள் பரிமளம், இசட் ஆசாத், வட்டச் செயலாளர் கதிரவன் உள்ளனர்.

### மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தொழிலாளர்களின்

# ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவித்திடுவீர்!

## ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் !

**சென்னை, மார்ச் 15- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஊரகப் பகுதிகளில் உள்ளூர் மக்களின் பங்களிப்புடன் கிராமங்களை மேம்படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தில் பணியாற்றிவரும் தொழிலாளர்க ளுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்க வலியுறுத்தி ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் அவர்களுக்கு - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 13.3. 2024 அன்று கடிதம் எழுதியுள்ளார்கள்.**

அக்கடிதத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஊரகப் பகுதிகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் முக்கிய மான திட்டங்களில் ஒன்றாகும். மேலும், ஊரக மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்பை வழங்குவதுடன், நீடித்த மற்றும் நிலையான ஊரக சொத்துக்களை உருவாக்கி, உள்ளூர் மக்களின் முனைப்பான பங்கேற்புடன் கிராமங்களை மேம்படுத்தும் ஒரே திட்டமாகும் என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இத்திட்டம் அனைவரையும் உள்ளடக்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், இத்திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களில் 86 விழுக்காடு மகளிர், 29 விழுக்காடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர் என்பதையும் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் பல்வேறு அளவீடுகளில் தமிழ்நாடு எப்போதும் திட்ட செயலாக்கத்தில் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதையும் முதலமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இதுவரை, மூன்று தவணைகளில் 37 கோடி மனித சக்தி நாட்களுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்றும் 06.03.2024 வரை தமிழ்நாடு 40.51 கோடி மனித சக்தி நாட்களை எட்டியுள்ளது என்றும் இதில் 68.68 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 79.28 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2023–24ஆம் ஆண்டில், 06.11.2024 வரை தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய ஊதியமான ரூ.8,734.32 கோடி நிலையில், ரூ.7,712.03 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் நவம்பர் 2023 மற்றும் டிசம்பர் 2023 ஆகிய ஆண்டுகளுக்கான ஊதியப் பொறுப்பு 05.01.2024 அன்று ரூ.1,022.29 கோடியாக உள்ளதையும் முதலமைச்சர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக, தாம் 10.01.2024 அன்று ஊதியத்தை முன்கூட்டியே வழங்குமாறு ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியதையடுத்து, ஒன்றிய அரசு 15.01.2024 மற்றும் 30.01. 2024 ஆகிய நாட்களில் ரூ.1,388.91 கோடி ஊதியத்தை விடுவித்தமைக்காக தனது நன்றியையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், நவம்பர் 2023 கடைசி வாரத்திலிருந்து திறன் சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாததால், அதனுடன் பொறுப்புத் தொகையும் ரூ. 1,678.83 கோடியாக சேர்ந்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், இது டிசம்பர் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபுரிந்த 24.21 லட்சம் குடும்பங் களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, 05.01.2024 வரை திரட்டப்பட்ட மொத்த ஊதிய பொறுப்புத் தொகையான ரூ.1,678.83 கோடியை தொழிலாளர்களுக்கு உடனடியாக ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும்; இது தொடர்பாக ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் அவர்களின் தனிப்பட்ட தலையீட்டை தாம் எதிர்பார்ப்பதாகவும் தமது கடிதத்தில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### எஸ்.பி.ஐ. வங்கி உட்பட அரசு நிறுவனங்கள்

# பிரதமர் மோடி கட்டுப்பாட்டில் உள்ளது வெட்ட வெளிச்சமாகியுள்ளது!

## டி.ஆர்.பாலு எம்.பி. விமர்சனம்!

செங்கல்பட்டு, மார்ச் 15- எஸ்.பி.ஐ. உட்பட அரசு நிறுவனங்கள் பிரதமர் கட்டுப்பாட்டில் இருப்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது, தேர்தல் பத்திரங்கள் விவரங்களில் ஜூன் மாதம் வரை கால அவகாசம் கேட்ட எஸ்.பி.ஐ. வங்கி, உடனடியாக எப்படி அளித்தார்கள் என நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பியுள்ளார்.

மழைக்காலத்தின்போது ஏரிகளில் இருந்து வரும் உபரி நீரால் செங்கல்பட்டு மாவட்டம் இரும்புலியூர் பகுதியில் உள்ள குடியிருப்புகள் நீரில் மூழ்கி வருகிறது.

இதனை தடுக்க நீர்வள ஆதாரத்துறை சார்பில் 96 கோடியே 50 லட்சம் செலவில் கட் அண்ட் கவர் கால்வாய் அமைக்கும் பணிகளை திருபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர்



டி.ஆர். பாலு நேற்று தொடங்கி வைத்தார்.

அப்போது தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, மேயர் வசந்தகுமாரி துணை மேயர் காமராஜ், மாநகராட்சி ஆணையர் அழகுமீனா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, தேர்தல் பத்திர பங்கு விவகாரத்தில் எஸ்.பி.ஐ. வங்கி ஜூன் மாதம் வரை அவகாசம் கேட்டார்கள்,

உச்சநீதிமன்றம் கண்டித்ததையடுத்து உடனடியாக அது தொடர்பான ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டார்.

இதன்மூலம் எஸ்.பி.ஐ. உட்பட எல்லா அரசு நிறுவனங்களும் பிரதமருக்கு கட்டுப்பட்டு நடப்பது வெட்ட வெளிச்சமாகியிருப்பதாக டி.ஆர்.பாலு விமர்சித்தார்.

# அரசு வழக்கறிஞர்களின் உழைப்பிற்கு அங்கீகாரம் அளித்த முதல்வருக்கு நன்றி!

## கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி.அறிக்கை!

சென்னை, மார்ச் 15 - தமிழ்நாடு அரசு வழக்கறிஞர்களுக்கான தொழில் ஊதியத்தினை மூன்று மடங்காக அதிகரித்து வழங்கி, அரசு வழக்கறிஞர்களின் உழைப்பிற்கு உரிய அங்கீகாரம் அளித்து “எல்லாருக்கும் எல்லாம்” எனும் அடிப்படை கொள்கையுடன் “திராவிட மாடல்” ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. சட்டத்துறை நன்றி தெரிவித்துள்ளது.

இது குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி., விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

“எல்லோருக்கும் எல்லாம்” எனும் அடிப்படை கொள்கையுடன், ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திட அல்லும் பகலும் அரும்பாடுபட்டு, “திராவிட மாடல்” ஆட்சி



நடத்தி வரும் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களிடம், அரசு வழக்கறிஞர்களின் நலன் மேம்படுத்தப்பட வேண்டும் என்று தி.மு.க. சட்டத்துறைச் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டு, அக்கோரிக்கையை தாயுள்ளத்துடன் பரிசீலித்தும் அவர்களின் உழைப்பை உரிய வகையில் அங்கீகரித்தும் அரசு வழக்கறிஞர்களின் நலனை எண்ணியும், அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் தமிழ்நாடு அரசு வழக்கறிஞர்களுக்கான ஊதிய விகிதத்தை மூன்று மடங்காக அதிகரித்து வழங்கி, என்றும் மக்களின் நலன் நாடும் அரசு என்பதை மீண்டுமொரு முறை நிரூபித்துள்ள முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, தி.மு.க. சட்டத்துறை சார்பிலும் கழக வழக்கறிஞர்கள் சார்பிலும் எமது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையக் கட்டடத்திற்கு பெயர் சூட்டப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை பெயர்ப்பலகையினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (14.03.2024) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் நே.சிற்றரசு, க.தனசேகரன், டாக்டர் கோ.சாந்தகுமாரி, த.விசுவநாதன், சர்பஜெயாதாஸ் நரேந்திரன், தா.இளையஅருணா, கூடுதல் ஆணையாளர்கள், இணை ஆணையாளர், துணை ஆணையாளர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இராயபுரத்தில் திட்டப் பணி தொடக்கம்

சென்னை, மார்ச் 15 –

வடசென்னை வாழ் பொதுமக்களின் நெடுங்காலக் கோரிக்கையினை ஏற்று, 2021–2022 ஆம் ஆண்டு நிதியின் கீழ் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தில் ரூபாய்.2 கோடியே 61 இலட்சம் மதிப்பீட்டில் இராயபுரம் சட்டமன்ற தொகுதி, 53வது வார்டு, மூலக்கொத்தளம் மயானத்தில் புதிதாக புகையில்லா எரியூட்டு தகன மேடையினை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், மண்டலக் குழுத் தலைவர். ஸ்ரீராமலு, மாமன்ற உறுப்பினர் திருமதி.வேளாங்கண்ணி, வட்ட செயலாளர் கௌரீஸ்வரன், , கழக நிர்வாகிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சென்னையை சீரழித்து பாழ்படுத்திய அ.தி.மு.க. அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! - முதல் பக்கத் தொடர்ச்சி

அண்ணா சாலை, அண்ணா மேம்பாலம், வள்ளுவர் கோட்டம், செம்மொழிப்பூங்கா, தொல்காப்பியப் பூங்கா, நாமக்கல் கவிஞர் மாளிகை, தலைமைச் செயலகமாக கட்டப்பட்டு இன்று பெரிய பல்நோக்கு அரசு மருத்துவமனையாக இருக்கின்ற ஓமந்தூரார் மருத்துவமனை, டைடல் பார்க், ஓ.எம்.ஆர் ஐ.டி.காரிடர், மெட்ரோ ரயில், கோயம்பேடு பேருந்து நிலையம், கோயம்பேடு காய்கறி அங்காடி, சென்னையில் வெள்ள பாதிப்புகளை தடுக்க பல நூறு கிலோமீட்டருக்கு மழைநீர்வடிகால் பணிகள், குடிநீர்த் தேவைக்கு நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், கத்திபாரா மேம்பாலம், கோயம்பேடு மேம்பாலம், பாடி பாலம், மீனம்பாக்கம் பாலம், மூலக்கடை பாலம், மேற்கு அண்ணாநகர் பாலம், வியாசர்பாடி பாலம், இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்

**சென்னையில் தி.மு.க. அரசால் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்!**

இப்படி திரும்பிய பக்கம் எல்லாம் சென்னைக்கான வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வளர்ச்சியை ஏற்படுத்தியது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழக அரசு!

நான், சென்னை மாநகரத்தின் மேயராக இருந்த காலக்கட்டம், என் மனதில் இன்னும் பசுமையாக இருக்கிறது. 'சென்னை மாநகரத்தின் தந்தை' என்று சொல்வதைவிட, இந்த மாநகரத்தின் முதல் சேவகனாக இருப்பதையே விரும்புறேன் என்று அப்போது சொன்னேன். மேயராக மட்டுமில்லை, முதலமைச்சராகவும், அப்படித்தான் செயல்படுகிறேன்; அது உங்களுக்கே தெரியும்!

மேயராக இருந்த காலத்தில், நம்முடைய பணிகளை பார்த்து, இந்தியாவின் மற்ற மாநகரங்கள் பொறாமைபடுகின்ற அளவுக்கு திட்டங்களை தீட்டினோம். போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, பத்துப் பாலங்கள் கட்டினோம். மாநகராட்சிப் பள்ளிகளை தரம் உயர்த்தி, மாணவர்களும், பெற்றோர்களும் சீட் கிடைக்க காத்திருக்கும் சூழலை உருவாக்கினோம்.

முதன்முதலாக, மழலையர் வகுப்பு தொடங்கப்பட்டது, குப்பை இல்லாத சென்னையை உருவாக்கினோம், திடக்கழிவு மேலாண்மைக்கு



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.3.2024) சென்னை, தங்க சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் தொடக்க விழாவில், திட்டப்பணிகள் தொடர்பான புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டார்.

முக்கியத்துவம் கொடுத்தோம், புதிய பூங்காக்கள், சாலையோர பூங்காக்கள், கூவம் கரையோர பூங்கா, விளையாட்டு திடல்கள், உடற்பயிற்சிக் கூடங்கள், மாணவர்களுக்கு மடிக்கணினி, சென்னைத் தெருக்களுக்கு அன்னைத் தமிழ்ப்பெயர், மூத்தகுடிமக்கள் சிகிச்சை மையம், மாநகராட்சி கணினி மையம், இப்படி, சென்னையை, 'சிங்காரச் சென்னை'யாக மாற்றினோம்.

நம்முடைய ஆட்சியில்தான் சென்னையின் அந்த காலம் பொற்காலமாக இருந்தது! இடைக் காலத்தில், பத்து வருடம் பதவியில் இருந்தவர்கள் சென்னையை சீரழித்து, பாழ்படுத்தினார்கள். பத்து வருடம் கழித்து, இப்போது, மீண்டும் கழக ஆட்சி மாநிலத்திலும் உதயமாகி, நகர்ப்புற வளர்ச்சியில், நேரு அவர்களும் மிக மிகச் சிறப்பாக இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவருக்கு துணையாக, சென்னை மாநகரத்தின் வணக்கத்துக்குரிய மேயர் பிரியா அவர்களும், துணை மேயர் மகேஷ் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்! ஏன் நம்முடைய கவுன்சிலர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

நம்மை பொறுத்தவரை, துயர் வரும் நேரத்தில் துணை நிற்பது மட்டுமில்லை; துயர் துடைக்க புதிய திட்டங்களையும் உருவாக்கிக் கொண்டு வருகிறோம்! சென்னை மீண்டும் புதுப்பொலிவு அடைந்து கொண்டு வருகிறது. இதற்காகவே தீட்டப்பட்டிருக்கின்ற சிறப்புத் திட்டம்தான் 'வடசென்னை வளர்ச்சித் திட்டம்!'

திராவிட மாடல் அரசின் கடந்த பட்ஜெட்டில், இந்த திட்டத்திற்காக ஆயிரம் கோடி ரூபாய் அறிவித்தோம்! ஆனால், வடசென்னையின் மக்கள் தொகை, இடப்பற்றாக்குறை, மக்கள் நெரிசல், போக்குவரத்து நெரிசல், இந்தப் பகுதி மக்களிடம் இருந்து வந்த கோரிக்கைகள், இதையெல்லாம் மனதில் வைத்து, இன்றைக்கு அந்தத் தொகையை நான்கு மடங்கு உயர்த்தி,

4 ஆயிரத்து 181 கோடி ரூபாய் மதிப்பில், 11 அரசுத் துறைகளுடன் இணைந்து, வட சென்னை வளர்ச்சிக்கு இந்த மெகா திட்டம் செயல்பட போகின்றது!

**மேலும் பல்வேறு திட்டங்கள் உருவாக்குவோம்!**

இந்த திட்டத்தின்கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்டங்களுக்கு 440 கோடியே 62 இலட்ச ரூபாயும், இதர துறைகளின் திட்டங்களுக்கு, 886 கோடியே 46 இலட்ச ரூபாயும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒதுக்கீடு செய்யும். மீதமுள்ள நிதியை அந்தந்த துறைகள், வாரியங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை ஒதுக்கீடுகள் மூலம் அடுத்த ரெண்டு ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த திட்டத்தில் என்னென்ன செய்யப் போகிறோம்? மாதிரிப் பள்ளிகளை உருவாக்குதல், குறைந்த விலையில் வீட்டுவசதி, திறன் மேம்பாட்டு மையங்களை உருவாக்குதல், புதிய பேருந்து நிலையங்கள் மற்றும் பணிமனைகள நிர்மாணித்தல், மேம்படுத்துதல், முக்கியமான பகுதிகளில் துணை மின் நிலையங்கள், போதைக்கு அடிமையானவர்களை மீட்கும் மறுவாழ்வு மையம், மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களில் சிசிடிவி கேமராக்கள், மருத்துவச் சுகாதார நிலையங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான உயர்சிறப்புப் பிரிவு, தரமான குடிநீர் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்படும்.

அதுமட்டுமல்ல, இந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை ஏற்று, கழிவுநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள், பொதுப் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சந்தைகள், சலவை செய்யுமிடம் மற்றும் டயாலிசிஸ் மையங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் வடசென்னை முழுக்க முக்கியமான இடங்களில் நிறுவப்படும். இன்னும் இருக்கிறது!

640 கோடி ரூபாய் செலவில், கொடுங்கையூரில் உயிரி சுரங்கத் திட்டம், 238 கோடி ரூபாய் செலவில் இரண்டு பெரிய பாலங்கள், 80 கோடி ரூபாயில் தணிகாசலம் கால்வாய் புனரமைப்புத் திட்டம் 823 கோடி ரூபாய் செலவில் பாரிமுனை பேருந்து முனையம் மறுகட்டுமானம், 15 இடங்களில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் 7 ஆயிரத்து 60 சேதமடைந்த குடியிருப்புகள் இடிக்கப்பட்டு 9 ஆயிரத்து 798 புதிய குடியிருப்புகள் ஆயிரத்து 567 கோடியே 68 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப் போகிறோம்!

**அடுத்த 3 ஆண்டுகளில் 200 திட்டங்கள்!**

இப்படி, இன்றைக்கு தொடங்கி வைத்திருக்கின்ற 87 திட்டங்கள் உட்பட அடுத்த மூன்று ஆண்டுகளில் 200 திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கிறது.

இந்தத் திட்டங்கள் எல்லாம் முடிவுறுகிறபோது, வடசென்னையின் வரலாற்றில், ஒரு புதிய சாகப்தத்தை திராவிட முன்னேற்றக் கழகம் எழுதியிருக்கும் என்பதை பெருமையோடு சொல்ல விரும்புகிறேன்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்**
**வடசென்னை வளர்ச்சித் திட்ட பணிகள் விரிவாக்க விழா**
**14.3.2024**

---

### க.பொன்முடியின் அமைச்சர் பதவி ஏற்புக்கு தாமதம் செய்தால் ஆளுநர் மீது வழக்கு!

### எடப்பாடி பழனிசாமி மீதும் பா.ஜ.க. அண்ணாமலை மீதும்

# ரூபாய் 1 கோடி கேட்டு மான நஷ்ட வழக்கு!

## தி.மு.கழகம் தொடர்ந்துள்ளதாக ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை,மார்ச்.15-

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் திமுக அபார வெற்றி பெறும் என்பதற்காகவே எடப்பாடி பழனிச்சாமியும் ,பாஜகவும் தொடர்ந்து அவதூறு பிரச்சாரங்கள் செய்து வருகிறது என்றும், எடப்பாடி பழனிச்சாமி மீதும் பாஜக அண்ணாமலை மீதும் ஒரு கோடி ரூபாய் மான நஷ்ட வழக்கை திமுக தொடர்ந்துள்ளது என்றும், போதை பொருள் கடத்தல் யாருடைய ஆட்சியில் அதிகமாக இருந்தது என்பது தமிழக மக்களுக்கு தெரியும் என்றும், முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு அமைச்சர் பதவி ஏற்பை ஆளுநர் ரவி காலதாமதம் செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்றும், சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில் தெரிவித்தார்.

இது குறித்து அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அளித்துள்ள பேட்டி வருமாறு:

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தொடர்ந்து திமுக மீது களங்கம் விளைவிக்கும் வகையில் அவதூறு பேசி வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சருக்கும் போதைப்பொருள் விற்பனை செய்பவருக்கும் தொடர்பு இருப்பதாக தொடர்ந்து அவதூறு பேசி வருகிறார்.

எடப்பாடி பழனிச்சாமி மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் திமுக சார்பில் ஒரு கோடி ரூபாய் மான நஷ்டம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

தமிழ்நாட்டில் போதை பொருள் யாருடைய ஆட்சியில் அதிகம் இருந்தது என்பது



எல்லோருக்கும் தெரியும்.

அண்மையில் கைது செய்யப்பட்டுள்ள சாதிக் என்பவருக்கும் திமுகவுக்கும் தொடர்பு இருப்பது போல ஒரு தவறான பிரச்சாரத்தை எடப்பாடி பழனிச்சாமி செய்து வருகிறார்.

ஆனால் அதிமுக ஆட்சி காலத்தில் சாதிக் மீது ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது 2013 ஆண்டு வழக்கு பதிவு செய்து, 2017 ஆம் ஆண்டு எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருந்தபோதே சாதிக் விடுதலை செய்யப்பட்டார். விடுதலைக்கு யார் காரணம் என்றால் எடப்பாடி பழனிச்சாமியால் நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞர் சீனிவாசன் என்பவர் தான். குற்றம் சாட்டப்பட்ட சாதிக் வழக்கை வேறு வகையான திசை திருப்பி அவருக்கு விடுதலை பெற்று தந்திருக்கிறார்.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் திமுக வெற்றி பெற இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு இது போன்ற தவறான பிரச்சாரத்தை எடப்பாடி பழனிச்சாமி ஈடுபட்டு வருகிறார். எடப்பாடி பழனிச்சாமி மீதும் அண்ணாமலை மீதும் கிரிமினல் வழக்கு போட்டுள்ளோம்

பி.ஜே.பி. யோட அடிமையாக எடப்பாடி பழனிச்சாமி இருக்கிறார்.

குஜராத்தில் நடந்த அந்த போதை பொருள் சம்பவத்தை எதிர்த்து மனித சங்கிலி நடத்தி இருந்தால் நாங்கள் சொல்லியிருப்போம் ஆனால் இன்றும் பிஜேபியுடன் கைகோர்த்து எடப்பாடி செயல்பட்டு வருகிறார் என்பது தெரிகிறது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டாலும் முன்னாள் அமைச்சர் பொன்முடிக்கு அமைச்சர் பதவி வழங்கலாம் .தேர்தலுக்கு முன்பே முதல்வர் ஆளுநருக்கு கடிதம் எழுதியுள்ளார். தேர்தலுக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

கவுன்சிலர் போல் பிரதமர் தமிழ்நாட்டுக்கு வருகை தந்துக் கொண்டு இருக்கிறார்.

அவர் தமிழ்நாட்டுக்கு வரும் போதெல்லாம் திமுகவிற்கு வாக்குகள் அதிகரிக்கும்.

ஆளுநர் ரவி பொன்முடிக்கு அமைச்சர் பதவி ஏற்புக்கு காலதாமதம் செய்தால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்போம். ஏற்கனவே ஆளுநர் ரவி நீதிமன்றம் மூலம் பல குட்டுக்களை வாங்கியுள்ளார்.

அதை சந்திக்க தயாராக இருந்தால் நீதி மன்றமே அதற்கு பதில் சொல்லும்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி பேட்டியளித்தார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (14.03.2024) சென்னை, சைதாப்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் ரூ.15.50 கோடி மதிப்பீட்டில் பேறுகால பச்சிளங்குழந்தை சிகிச்சைப்பிரிவின் கூடுதல் தளங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். இந்நிகழ்வில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செங்கல்பட்டு மாவட்ட இணை இயக்குநர் மரு.தீர்த்தலிங்கம், சைதாப்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனை முதன்மை மருத்துவ அலுவலர் மரு.கென்னடி, உயரலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

### பொள்ளாச்சியில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த

# நீதிமன்றக் கட்டிடத்திற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்த ரூ.14.59 கோடி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மார்ச் 15-

கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்தித் தர 14 கோடியே 59 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.03.2024) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நடைபெற்ற கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி ஆகிய நான்கு மாவட்டங்களுக்கான முடிவுற்ற பணிகள் திறப்பு விழா, புதிய திட்டப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா ஆகிய அரசு விழாக்களில் பங்கேற்று, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.

அச்சமயம், பொள்ளாச்சியில் தற்போது கட்டப்பட்டு வரும் 10 நீதிமன்றங்கள் மற்றும் 5 நீதிபதிகள் குடியிருப்புகள் அடங்கிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு கூடுதல் வசதிகள் (Additional Amenities) செய்து தர வேண்டும் எனக் கோரிக்கை வைக்கப்பட்டது.

அக்கோரிக்கையினை பரிசீலனை செய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேற்படி ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு ஏதுவாக, 14 கோடியே 59 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்து நேற்று (14.3.2024) ஆணையிட்டுள்ளார்.

இவ்வாறு அரசு செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### பள்ளிக் கட்டிடங்கள் – ஆரம்ப சுகாதார நிலையம்!

# இராயபுரம் மண்டலத்தில் திட்டப்பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. திறந்து வைத்தனர்!

*சென்னை, மார்ச் 15-*

*இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் இராயபுரம் மண்டலம், வார்டு 60க்குட்பட்ட இப்ராஹிம் தெரு, உருது பள்ளியில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.96.17 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறைக் கட்டடங்களை நேற்று (14.03.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.*

*பின்னர், அங்கப்பன் தெரு, சென்னை பள்ளியில் மூலதன நிதியின் கீழ், ரூ.2.08 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள பள்ளிக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.*

*தொடர்ச்சியாக, வார்டு-56க்குட்பட்ட பி.ஆர்.என்.கார்டன், பிரகாசம் சாலையில் தேசிய நகர்ப்புற சுகாதார திட்ட நிதியின் கீழ், ரூ.2.89 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம், வார்டு 55க்குட்பட்ட அப்பு மேஸ்திரி தெருவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ், ரூ.1.47 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.*

*இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திரபானு ரெட்டி, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் வெ.பரிமளம், இசட். ஆசாத், ல.நவீன், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (14.3.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி கலந்து கொண்டார்.







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2024) தலைமைச் செயலகத்தில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 4 சதவீத அகவிலைப்படி உயர்த்தி அறிவித்தமைக்காக தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும் அடிப்படை பணியாளர்கள் மாநில மையச் சங்கம், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அனைத்துப் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் (தியோடர்), தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி தொழில்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழ்நாடு வேளாண்மை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை பணியாளர் கழகம், டாக்டர் ராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், தமிழக இடைநிலை மற்றும் பதவி உயர்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் மன்றம் (தீபம்), தமிழக பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசுத் தேர்வுத்துறை பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆசிரியர் காப்பாளர் சங்கம், தமிழ்நாடு முதுகலை பட்டதாரி தொழிற்கல்வி ஆசிரியர் சங்கம், தமிழக தமிழாசிரியர் கழகம், டாக்டர் இராதாகிருஷ்ணன் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் இயக்கம் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### சாலை விபத்தில் – மேற்கு வங்க முதல்வர்

# மம்தா பானர்ஜிக்கு பலத்த காயம்!

## விரைந்து நலம்பெற – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, மார்ச் 15–

மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள் நேற்று நடைபெற்ற சாலை விபத்தொன்றில் பலத்த காயமடைந்தார். இது குறித்து தகவலறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அவர் விரைந்து நலம்பெற வேண்டும் என்று சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது பற்றி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பதிவு வருமாறு:–

**சாலை விபத்தொன்றில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அவர்கள் பலத்த காயமடைந்தார் என்ற தகவலால் அதிர்ச்சியும் ஆழ்ந்த வேதனையும் அடைந்தேன்.**

**இந்தக் கடுமையான கால கட்டத்தில் என்னுடைய கவலைகள் யாவும் அவருடனே இருக்கின்றன. அவர் விரைந்து நலம்பெற வேண்டும் என விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# ஒரே நாடு – ஒரே தேர்தல் அறிக்கை!

## குடியரசுத் தலைவரிடம் – ராம்நாத் கோவிந்த் குழு வழங்கியது!

புதுடெல்லி, மார்ச் 15 -

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து ஆய்வு அறிக்கையை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவிடம் உயர்நிலைக் குழு சமர்ப்பித்துள்ளது.

நாடு முழுவதும் ஒரே நேரத்தில் மக்களவை, சட்டப்பேரவைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவது தொடர்பாக ஆய்வுசெய்து அறிக்கை தாக்கல் செய்ய முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் கடந்த செப்டம்பர் மாதம் ஒன்றிய அரசு குழு அமைத்தது. நாடு முழுவதும் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சட்ட வல்லுநர்கள் உள்பட பல்வேறு தரப்பிடம் கருத்துகள் கேட்கப்பட்டது. ஒரே நாடு - ஒரே தேர்தல் திட்டத்திற்கு தி.மு.க., காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

ஒரே நாடு, ஒரே தேர்தல் முறை நடைமுறைக்கு சாத்தியமற்றது எனவும் அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கு எதிரானது என்றும், உயர்நிலைக்குழுவிடம் கடந்த ஜனவரி மாதம் 17 ஆம் தேதி தி.மு.க. கடிதம் எழுதியிருந்தது. ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்தை கைவிடக்கோரி, கடந்த மாதம் 10 ஆம் தேதி ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழுவை, தி.மு.க. சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் நேரில் சந்தித்தும் வலியுறுத்தினார்.

ஆனால், எதிர்க்கட்சிகளின் கருத்துகளை புறக்கணித்து, 2029 ஆம் ஆண்டு ஒரே நாடு, ஒரே தேர்தல் நடத்துவதற்கான ஆய்வறிக்கையை உயர்மட்டக்குழு தயார் செய்துள்ளது. 18 ஆயிரத்து 626 பக்கங்கள் கொண்ட ஆய்வறிக்கையை, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவிடம் சமர்ப்பித்துள்ள உயர்மட்டக்குழு, ஒரே நாடு, ஒரே தேர்தலுக்காக அரசமைப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய பரிந்துரை செய்துள்ளது.

### 10 ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில்

# விவசாயிகள் கடன் தள்ளுபடி விபரத்தை மோடி கூற முடியுமா?

## ராகுல்காந்தி கேள்வி!



மும்பை, மார்ச் 15-

ஒன்றிய பா.ஜ.க., அரசின் 10 ஆண்டுகால ஆட்சியில் எவ்வளவு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து பிரதமர் மோடியால் கூற முடியுமா என்று காங்கிரஸ் முன்னணி தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பாரத் ஜோடா பயணத்தை ராகுல்காந்தி மேற்கொண்டார். அவரது நடைபயணத்தில் தேசியவாத காங்கிரஸ் கட்சி தலைவர் சரத்பவார் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

அப்போது விவசாயிகளை சந்தித்து அவர்களுடன் ராகுல்காந்தி கலந்துரையாடினார். இதன்பின்பு செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் மிகப்பெரிய பிரச்சினைகளாக பணவீக்கம், வேலைவாய்ப்பின்மை, விவசாயிகள் சந்தித்து வரும் பிரச்சினை உள்ளிட்டவை இருப்பதாக கூறினார். ஆனால் இந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மோடி அரசு தயாராக இல்லை என்று அவர் குற்றம்சாட்டினார். விளைப் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை வழங்கப்படும், அவர்களின் வருமானம் இரட்டிப்பாக்கப்படும் என்ற பிரதமர் மோடியின் வாக்குறுதிகள் என்னவாயிற்று என்று அவர் வினவினார்.

10 ஆண்டுகால பா.ஜ.க., ஆட்சியில் எவ்வளவு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டது என்பது குறித்து பிரதமர் மோடியால் கூற முடியுமா என்று ராகுல் காந்தி கேள்வி எழுப்பினார். விவசாயிகளுக்கு ஒரு ரூபாய் கடனை கூட தள்ளுபடி செய்யாதவர்தான் மோடி என்று அவர் விமர்சித்தார். ஆனால், பெரு முதலாளிகளின் 16 லட்சம் கோடி ரூபாய் கடன்கள் மட்டும் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக ராகுல்காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

கோரிக்கைகளை நிறைவேற்றாததால்தான் டெல்லி ராம்லீலா மைதானத்தில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று ராகுல்காந்தி கூறினார்.

இதனிடையே காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூகவலைத்தளப் பதிவில், விவசாயிகளுக்கு 5 தேர்தல் வாக்குறுதிகளை ராகுல்காந்தி அளித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார். குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்ட அங்கீகாரம், இதற்காக நாடாளுமன்றம் மூலம் சிறப்பு சட்டம், சுவாமிநாதன் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் நிலுவை கடன்களை ஆராய்ந்து தள்ளுபடி செய்ய குழு அமைக்கப்படும், மழை, வெள்ளம், வறட்சி போன்ற பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் பயிர்களுக்கு உரிய காலத்திற்குள் வங்கி கணக்குகள் மூலம் நிவாரணத்தொகை உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளதாக ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட் டுள்ளார். விவசாயப் பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் கொள்கையில் சீர்திருத்தம், விவசாயத்துக்கு பயன்படுத்தப் படும் உபகரணங்களுக்கு ஜி.எஸ்.டி., வரியிலிருந்து விலக்கு உள்ளிட்ட வாக்குறுதிகளை ராகுல்காந்தி அளித்துள்ளதாக ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

### கழக அயலக அணி சார்பில் – ஆலங்குடி சையது முஸ்தபா தலைமையில்

# குவைத் நாட்டில் முதல்வர் பிறந்தநாள் மாபெரும் குருதிக்கொடை முகாம்!

## சிதம்பரம் ந.தியாகராஜன் – புதுக்கோட்டை பஷீர் அகமது – பத்தமடை சிந்தா பக்கீர் முன்னிலை!

குவைத், மார்ச் 15 -

குவைத் நாட்டில் தி.மு. கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. பிறந்த நாளை முன்னிட்டு திமுக அயலக அணியின் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம், குவைத் சார்பாக மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது.

குவைத் நாட்டில் தி.மு.கழக அயலக அணியின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் தி.மு.க., தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை வெகு சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

இந்த ஆண்டு அவரின் 71 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் குருதிக்கொடை முகாம் நடைபெற்றது. அமைப்பின் இணைச்செயலாளர் ஆயங்குடி சையது முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இந்த குருதிக்கொடை முகாமிற்கு அயலக அணி குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன், அமைப்பின் செயலாளர் புதுக்கோட்டை பஷீர் அகமது, அமைப்பின் பொருளாளர் பத்தமடை சிந்தா பக்கீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் அவைத் தலைவர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா வரவேற்புரை நிகழ்த்தினார்.

அமைப்பின் துணைச் செயலாளர் முத்துப்பேட்டை ம.சபரி வாசன், மகளிர் அணி செயலாளர் கோவை டி.கே.சரண்யா தேவி, மகளிர் அணி துணைச் செயலாளர் தஞ்சை சாந்தி பாலசுப்ரமணியன் மற்றும் குவைத் வாழ் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தளபதியாரின் ஆட்சியின் சிறப்பு அம்சங்களை கூறி வாழ்த்துரை வழங்கினர்.

தளபதியாரின் ஆட்சியில் மகளிர் நலன், சமூக நீதி, தொழில் வளர்ச்சி போன்றவற்றின் முன்னேற்றம் பற்றி எடுத்துரைத்தனர்.

மேலும் இந்நிகழ்வில் ஒரத்தநாடு, பாப்பா தியாகராஜன், முனசந்தை, சிக்கந்தர் சேகரை, வே. செல்லதுரை, விழுப்புரம் ஜஹாங்கீர், தக்கலை ஜோசப் பெர்லின், உளுந்தூர்பேட்டை சு.வெங்கடேசன், புதுகை மு.சையது முகமது கனி, பரங்கிப் பேட்டை மு.நஸ்ருதீன், மேட்டுவிளை ஐ.ஜாணுவாஸ், தானியம்பாடி சே. அசரப்பள்ளி, நாகப்பட்டினம் .புகழரசன், ராமநாதபுரம்.நாகேந்திரன், பெரம்பலூர் சதக்கத்துல்லா, தஞ்சை .சாத் அன்வர், பத்தமடை .காட்டுப்பாவா, மதுரை கோகுல் ராஜா, ஆத்தூர் ஜான் பாஷா திருக்கோவிலூர் பொன்முடி, அனைகாடு தாமஸ் தேவா சகாயம், மருதூர் எம். பிரேம்குமார், கரமக்குடி அ.ஜாபர் சாதிக் பேராவூரணி ரபீக், கன்னியாகுமரி ஜோசப் எடிசன், திருவிட தூர் ஏ. எஸ்.முகமது ரபிக், குடந்தை தியாகராஜன், காட்டூர் சோ ஆறுமுகம், வேளாண் புதுக்குடி ஜியாவுதீன்,

திருவாரூர் கார்த்திகேயன், குளத்தூர் கணேசன், சேத்துப்பட்டு கணேசன், நீடாமங்கலம் சதாம் உசேன், பெரம்பலூர் முகமது ரபிக், பரங்கிப்பேட்டை முகமது உசேன், கொள்ளிடம் காவேரி செல்வம், திட்டச்சேரி சாகுல் ஹமீது தஞ்சை செந்தில் ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில் முத்தாய்ப்பாக கழக உணர்வாளர்கள் மட்டுமின்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி கட்சிகளான விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், மனிதநேய ஜனநாயக கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர்.

இதில் ஒரு சிறப்பாக அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு தொண்டர் கலந்து கொண்டு தமிழகத்தை காத்து நிற்கும் காவல் தெய்வமான தளபதியின் பிறந்தநாளுக்கு நானும் குருதி தானம் செய்கிறேன் என முன்வந்து குருதிக்கொடை அளித்தது அங்கு பெரும் நெகிழ்வை உண்டாக்கியது.

இந்த நிகழ்வில் புலம் பெயர் தமிழர் திருநாளில் புலம்பெயர் சாதனைத் தமிழர்களை கௌரவிக்கும் வகையில் குவைத் நாட்டின் அயலக தி.மு.க. மகளிர் அணி செயலாளர் கோவை டி.கே.சரண்யா தேவிக்கு "கணியன் பூங்குன்றனார்" விருது வழங்கி சிறப்பித்திருந்தனர்.

அதை கௌரவிக்கும் விதமாக இந்நிகழ்வில் அவருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.

நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வின் இறுதியாக அமைப்பின் துணை பொருளாளர் புதுவை அ.அறிவுமணி நன்றி கூறினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# மயிலை கிழக்குப் பகுதி இளைஞர் அணி சார்பில் நல உதவிகள்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, மார்ச் 15 -

மயிலை கிழக்கு பகுதி தி.மு.க இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் நாயகரின் 71 வது பிறந்த நாள் விழாவையொட்டி, பள்ளி மாணவர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (15.03.2024 வெள்ளிக்கிழமை) மதியம் 12.00 மணிக்கு சி.எஸ்.ஐ காதுகேளாதோர் மேல்நிலைப்பள்ளி சாந்தோமில் நடைபெறுகிறது.

தலைமை : பகுதி துணை அமைப்பாளர் இளைஞர் அணி டி.ஜெகதீஸ்பாபு

முன்னிலை: மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி , 171வது வட்ட செயலாளர் துரைப்பார்த்தி பன், 125வது வட்ட செயலாளர் அ.தவநேசன், 171 வது மாமன்ற உறுப்பினர் கீதாமுரளி, 125வது மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி,

வரவேற்பு: ராஜா அன்பழகன், த.விக்னேஸ்வரன் தினேஷ் மாணிக்கம், ஸ்டோன் வீ.அருண்குமார், தா.தீபன் கோ.கோபி, அ.பிரிட்டோ, க.ராஜ்குமார்

உணவு வழங்குபவர்: சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.,

இதில் எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல். உதயகுமார், ஏ.தாஸ், மா. பா.அன்பு, வி.வெற்றிவேல், கோ.கண்ணன், பா.பொன்னுசாமி, டி.ராஜவேலு, சீ. கிருஷ்ணமூர்த்தி, ராஜாசுரேஷ்குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.இராஜேந்திரன்

மயிலை கிழக்கு பகுதி வட்ட துணை அமைப்பாளர்கள் ப.சூர்யா. ம.கண்ணன், தா.சாய்பிரசாந்த், சீ.ராஜா, ச.பிரேம்குமார். க.குகன் அ.சூர்யா, ச.ரஞ்சித் குமார், த.தினேஷ்.நா.பிரகாஷ், இ.குமரன், ஜான் கு.விஜயகுமார். ர. விக்னேஷ்ர.விக்னேஷ். ச.ருதுகுமார், ரா.மகேந்திரன் மு.விக்னேஷ்.எம்.மணிகண்டன், ப.சார்லி, ஆ.சிவா, வெ. கிருபாகரன்,. ரா.மோகன்ராஜ், சே.விஜய், வே.ஹேமந்த்குமார், ச.தீபன், மு.நிரஞ்ச ன் சாய், ர.கணேஷ் பா.முருகேசன், கழக உடன்பிறப்புக்கள் பங்கேற்கின்றனர்.

நிகழச்சி ஏற்பாடு: மயிலை கிழக்கு பகுதி துணை அமைப்பாளர் இளைஞர் அணி டி.ஜெகதீஸ்பாபு.

### கடலூர் மேற்கு மாவட்டம்

# நெய்வேலி நகரக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி நகரச் செயலாளராக பணியாற்றி வரும் வி.பக்கிரிசாமி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக தான் வகித்து வந்த நகரச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து கொண்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **வீ.குருநாதன்**, (சி - 20, சுரங்க சாலை, வட்டம்-24, நெய்வேலி டவுன்ஷிப், கடலூர் மாவட்டம்.) அவர்கள் நெய்வேலி நகரக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட நகரக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 14.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 146 வது வட்டத்தில் பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில், வட்டக் கழக செயலாளர் எம்.ரூபன் தலைமையில், பி வாசு, எம் சங்கர் பி.வி. சௌந்தர், வ. கண்ணன், எம் சுப்பு, என் இளவரசன், ஜெ. ஹேமச்சந்திரன், பி. சிவக்குமார் ஏ. வினோத்குமார் ஆகியோரின் ஏற்பாட்டில் 3000 நபர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் பிரியாணியை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தீ.பாலாஜி, தினகரன், சண்முகம், வட்டக் கழகத்திற்கு உட்பட்ட கழகத் தோழர்கள் கழக முன்னாடிகள் உள்ளனர்.





திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் நரசிங்கபுரம் ஊராட்சியில் குழந்தைகள் நேய பள்ளி உள் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ 28.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடத்தை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மோ. ரமேஷ், ஒன்றிய கழக நிர்வாகிகள் உளுந்தை ஆர். கோபால், ஏ. தேவ ஆசீர்வாதம், பிஞ்சிவாக்கம் ரவி , கருணாநிதி, ஊராட்சி மன்ற தலைவர் ஜெயந்தி மோகன், ஒன்றிய குழு உறுப்பினர் தயாளன், இருளஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர் தமிழ் மொழி, வட்டார வளர்ச்சி அலுவலர் வரதராஜன், உள்ளிட்ட கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தாம்பரம் மாநகராட்சி ஐந்தாவது மண்டலம், 62 வது வார்டு கிழக்கு தாம்பரம் இரும்புலியூர் அருள் நகர் பகுதியில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள பாதிப்புகளை ஏற்படாமல் தடுக்க 91 கோடி ரூபாய் செலவில் கட்டன் கால்வாய் பணியை கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு எம்.பி. கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். உடன் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் .க.வசந்தகுமாரி அவர்கள் மண்டலகுழு தலைவர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ், மாநகராட்சி ஆணையாளர் அழகு மீனா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து பல்வேறு அரசு துறைகளின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, ஒன்றியக் குழுத் தலைவர்கள் டாக்டர் ஆர்.டி.அரசு, உதயா கருணாகரன், ஒன்றியச் செயலாளர் வீ.தமிழ்மணி, நகரச் செயலாளர் ஜெ.சண்முகம், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், நகர்மன்ற தலைவர் தேன்மொழி நரேந்திரன், பேரூர் செயலாளர் ஜி.டி.யுவராஜ், அரசு உயர் அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ / மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் உள்ளனர்.

### சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாகத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

*சென்னை, மார்ச் 15 -*

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையக் கட்டடத்திற்கு பெயர் சூட்டப்பட்ட "முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை" பெயர்ப்பலகையினை திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 24.2.2024 அன்று நெம்மேலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்ட சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையத்தினைத் திறந்து வைத்து, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, இக்கட்டடத்திற்கு "முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை" என பெயரிடப்படும் என அறிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள சீர்மிகு ஆளுமைக் கட்டடம் மற்றும் கட்டளை மையக் கட்டடத்திற்கு பெயர் சூட்டப்பட்ட "முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி மாளிகை" பெயர்ப்பலகையினை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (14.03.2024) திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, இக்கட்டடத்தில் உள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் செயல்பாட்டினைப் பார்வையிட்டார்.

இக்கட்டடம் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், ரிப்பன் கட்டட வளாகத்திற்குள் 4,705 ச.மீ. பரப்பளவில் ரூ.57.76 கோடி மதிப்பில் அதிநவீன உட்கட்டமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. இந்த சீர்மிகு ஆளுமைக் கட்டடத்தில் 24 x 7 மணி நேரமும் இயங்கும் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம், பேரிடர் மேலாண்மை மையம், தகவல் தொழில்நுட்பத் துறை (IT) மற்றும் புவியியல் தகவல் அமைப்புத் துறை (GIS), சிறப்பு திட்டங்கள் துறைக்கான அலுவலகம், கூட்டரங்குகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

இக்கட்டடத்தின் வடிவமைப்பு பாரம்பரிய ரிப்பன் கட்டடத்துடன் பொருந்தும் வகையிலும், LEED மற்றும் IGBC அமைப்புகளின் அதிக மதிப்பீடுகளை பெறும் வகையில் சுற்றுச்சூழல் நிலைத்த ன்மைக்கு ஏற்ற வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ரிப்பன் கட்டட வளாகத்திற்குள் உள்ள அனைத்து முக்கிய கட்டடங்களையம் இணைக்கும் வகையில் ஆகாய நடைபாதையும் (Skywalk) கட்டப்பட்டுள்ளது. இந்திய பசுமைக் கட்டட கவுன்சில் (IGBC) இக்கட்டடத்திற்கு 21.11.2023 அன்று இந்திய அளவில் அரசு கட்டடங்களில் அதிக மதிப்பெண் வழங்கி கௌரவித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் உடல் நலனைப் பேணும் வகையில் ரிப்பன் கட்டட வளாகத்தில் ரூ.19.20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சிக் கூடத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையிடத்திலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஆரோக்கியத்தை பேணும் வகையிலும், புத்துணர்ச்சியுடன் பணியை மேற்கொள்ள ஏதுவாக உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கு மற்றும் உள்விளையாட்டு (Indoor Games) கட்டமைப்பு சீரமைத்து தரப்படும் என்கிற மேயர் அவர்களின் அறிவிப்பின்படி, ரூ.19.20 இலட்சம் மதிப்பீட்டில் ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள பழைய பொறியியல் அலுவலகக் கட்டடத்தின் தரைத்தளத்தில் சுமார் 1000 சதுர அடி பரப்பளவில் நவீன உடற்பயிற்சி உபகரணங்களுடன் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், ம துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் நே.சிற்றரசு (பணிகள்), க.தனசேகரன் (கணக்கு), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), த.விசுவநாதன் (கல்வி), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), தா.இளையஅருணா (நகரமைப்பு), கூடுதல் ஆணையாளர்கள் டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி, (சுகாதாரம்), திருமதி ஆர். லலிதா, (வருவாய் (ம) நிதி), இணை ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையாளர்கள் திருமதி ஷரண்யா அறி, (கல்வி), எம்.பி. அமித், (தெற்கு வட்டாரம்), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்திய வட்டாரம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்), மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ்.மதன்மோகன், ஏ.வி.ஆறுமுகம், நேதாஜி யு. கணேசன், எம். கிருஷ்ணமூர்த்தி, நொளம்பூர் வே.ராஜன், வி.இ.மதியழகன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர்கள், அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

### நற்பெயருக்கு களங்கம் கற்பிக்க முயற்சி!

# பழனிசாமி - அண்ணாமலை மீது முதல்வர் அவதூறு வழக்கு!

## சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ளார்!

*சென்னை, மார்ச் 15-*

போதைப் பொருள் தடுப்பில் தமிழ்நாடு அரசு கடும் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், பொய் தகவல்களை பரப்பி வரும் எடப்பாடி பழனிசாமி மற்றும் பா.ஜ.க., மாநிலத் தலைவர் அண்ணாமலை மீது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சார்பில் அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நடவடிக்கைகளால் தமிழ்நாடு போதைப் பொருள் இல்லா மாநிலமாக திகழ்ந்து வருகிறது. ஆனால், இந்த விவகாரத்தில் முதலமைச்சர் மீது அவதூறு பரப்பும் வகையில், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமியும், பா.ஜ.க., மாநிலத் தலைவர் அண்ணாமலையும் செயல்பட்டு வருகின்றனர்.

இதற்கு பல்வேறு தரப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

பா.ஜ.க., ஆளும் மாநிலங்களில்தான் போதைப் பொருட்கள் புழக்கம் தலைவிரித்தாடுவதாகவும், அம்மாநிலங்களில்தான் போதைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, நாட்டின் மற்ற மாநிலங்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது என்றும் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், போதைப் பொருள் விவகாரத்தில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரும் முதலமைச்சரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கிலும், அவதூறு பரப்பும் வகையிலும் செயல்பட்டு வரும் எடப்பாடி பழனிசாமி மற்றும் பா.ஜ.க., மாநிலத் தலைவர் அண்ணாமலை மீது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டுள்ளது. சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் சென்னை மாநகர குற்றவியல் வழக்கறிஞர் ஜி. தேவராஜன் இந்த அவதூறு வழக்கை தொடர்ந்துள்ளார். இருவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அனைத்துச் செயல்பாடுகளுக்கு

# ரூ.36.60 கோடி மதிப்பீட்டில் கணினிமயமாக்கல்!

## அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை

*சென்னை, மார்ச் 15 -*

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் ரூ.36.60 கோடி மதிப்பீட்டில் முழு கணினி மயமாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி கொடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அரிசி, கோதுமை, சர்க்கரை, பருப்பு மற்றும் பாமாயில் உள்ளிட்ட இன்றியமையாப் பொருள்களைக் கொள்முதல் செய்து, சேமித்து குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கும் உன்னத பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்யும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. 1972-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடங்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் முதல்வர்களின் முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றபின் பொன் விழா கண்டு சிறப்பான சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டங்களுக்குப் பொருட்கள் கொள்முதல், கிட்டங்கிகளில் சேமித்தல், விநியோகித்தல், கொள்முதல் செய்யப்படும் பொருட்களின் தரம் பார்த்தல், நெல் கொள்முதல், கொள்முதல் செய்த நெல்லை அரவை ஆலைகளுக்கு அனுப்புதல், கொள்முதல் நிலையங்களிலிருந்து கிட்டங்கிகளுக்கும் அரவை ஆலைகளுக்கும், பொது விநியோகத்திட்ட அங்காடிகளுக்கும், லாரிகள் மூலம் இயக்கம் செய்தல், கேழ்வரகு கொள்முதல் செய்தல், பணியாளர் நிர்வாகம், வரவு செலவுக் கணக்குகளைப் பராமரித்தல் உள்ளிட்ட பணிகளை மேம்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.36.60 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அனைத்துப் பணிகளையும் முழு கணினிமயமாக்கப்பட ஆணையிட்டுள்ளார்கள்.

இதனால் பொது விநியோகத் திட்டத்தினை மேலும் செம்மைப்படுத்தி அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் தரமான பொருட்கள், உரிய நேரத்தில் கிடைத்திடுவதை உறுதி செய்திடவும், அரசு நேரடி கொள்முதல் நிலையங்களின் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல் மற்றும் கேழ்வரகிற்குரிய தொகையினை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் உடனடியாகச் செலுத்தி. கொள்முதல் செய்யப்படும் தானியங்களைத் துரிதமாக அரவை ஆலைகளுக்கு நகர்வு செய்தல், அரவை ஆலைகளில் இருந்து பெறப்படும் அரிசியினைக் கிட்டங்கிகளில் சேமித்து தேவையின் அடிப்படையில் நியாய விலைக் கடைகளுக்கு விநியோகம் செய்தல் ஆகிய பணிகள் முழுதும் ஒருங்கிணைக்கப்பட்டு அனைத்துப் பணிகளின் திறனும் கணினிமயமாக்கல் மூலம் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாகப் பணிகள் அனைத்தும் முழு கணினிமயமாக்கப்பட்டு மென்பொருளைச் செயல்படுத்துவதன் மூலம் பணியாளர்கள் பணிநியமனம் முதல் பணிஓய்வு மற்றும் பணப்பயன்கள் பெறும் வரையிலான செயல்கள் விரைவுபடுத்த ப்பட்டு உடனுக்குடன் பயன் பெறுவார்கள்.

பொது விநியோகத் திட்டம், சிறப்பு பொது விநியோகத் திட்டம், ஒப்பந்தப் பணிகள், பட்டுவாடா செய்யப்படும் தொகை, உற்பத்தி மற்றும் காலாவதி நாள், சேமித்து வைக்கப்படும் கிட்டங்கிகள், இயக்கம் செய்யப்படும் பொது விநியோகத் திட்ட அங்காடிகள், பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படும் வரை மென்பொருள் வாயிலாக முழு கணினிமயமாக்க நடவடிக்கைகளால் பொது விநியோகத் திட்டம் மேலும் வெளிப்படைத் தன்மையுடனும் மேம்பட்ட திறனுடனும் செயல்படுத்தப்படும்.



பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் பொருட்களைச் சேமித்து வைக்கும் கிட்டங்கிகளில் உள்ள இருப்பின் அளவினைத் தலைமையிடத்தில் இருந்தே கண்காணித்து இருப்பின்மையைத் தவிர்த்து, தேவைக்கேற்ப கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகளின் மூலம் எவ்வித தொய்வுமின்றி வழங்க வழி செய்ய இயலும்.

மென்பொருளில் விவசாயிகளுக்கென தனி செயலி உருவாக்கப்படுவதன் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படும் நாட்கள் மற்றும் நேரம், இடம் உள்ளிட்ட விவரங்களைச் செயலி மூலம் விவசாயிகள் அறிந்துகொண்டு, நெல்லினை உரிய நேரத்தில் விற்பனை செய்திட தாங்களே நாள் மற்றும் நேரங்களைத் தேர்வு செய்திடவும் விற்பனை செய்யப்படும் நெல்லின் அளவு, விலை, வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் தொகையின் விவரம் தெரிந்து பயன்பெறவும் தினசரி வானிலை அறிக்கையினைச் செயலியின் மூலம் அறிந்து கொண்டு வேளாண் பொருட்களைப் பாதுகாத்திடவும் இயலும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு மற்றும் ஆண்டுக் கணக்கினைப் புதிய மென்பொருள் வாயிலாக விரைந்து முடித்திட இயலும். கழகத்தின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் விவரங்களையும் மென்பொருள் வாயிலாக எளிதாக பராமரிக்க முடியும்.

பொது விநியோகத் திட்டச் செயல்பாடுகளைக் கள ஆய்வு செய்யும் அதிகாரிகளின் அறிக்கை மற்றும் விழிப்புபணிக்குழுவினரின் ஆய்வு சம்மந்தமான அறிக்கைகளைச் செயலி உருவாக்கப்படுவதன் வாயிலாக மேம்படுத்தி புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து, குறைகளை விரைந்து களைய முடியும்.

இவ்வாறு பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் விரைந்து மேம்பட்ட தன்மையுடன் செயல்படும் வகையில் முழுதும் கணினிமயமாக்க ஆணையிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### டெல்லி ராம்லீலா மைதானத்தில்

# விவசாயிகள் போராட்டம் தீவிரமடைந்தது !

## போராட்டத்தை ஒடுக்க ஒன்றிய அரசு நடவடிக்கை !

புதுடெல்லி, மார்ச் 15–

குறைந்தபட்ச ஆதார விலைக்கான உத்தரவாதம் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றாத ஒன்றிய பா.ஜ.க., அரசைக் கண்டித்து டெல்லி ராம் லீலா மைதானத்தில் விவசாயிகள் மகா பஞ்சாயத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்யுக்தா கிசான் சங்கம் சார்பாக டெல்லியில் ஒரு நாள் மகா பஞ்சாயத்து போராட்டம் நேற்று நடைபெற்றது. டெல்லி ராம்லீலா மைதானத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் திரண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். பெண் விவசாயிகளும் அதிகளவில் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கம் எழுப்பி தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

இதனிடையே விவசாயிகள் போராட்டத்திற்கு பல்வேறு நிபந்தனைகளை டெல்லி போலீசார் விதித்தனர். டிராக்டர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பேருந்து மற்றும் ரயில் மூலம் வரும் விவசாயிகளை மட்டுமே டெல்லி காவல்துறையினர் அனுமதித்தனர். நேற்று ஒரு நாள் மட்டுமே இந்த போராட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. விவசாயிகள் போராட்டம் காரணமாக டெல்லியில் பல்வேறு போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி மற்றும் திருவேற்காடு நகரம் 6–வது வார்டு சார்பில் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி அயனம்பாக்கத்தில் நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.பிரியாகுமார், வட்ட செயலாளர் தெய்வசிகாமணி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் 800 பெண்களுக்கு இலவச புடவை, உணவு, மகளிர் குழுக்களுக்கு கடன் உதவி ஆணைகள் மற்றும் சாலை வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகளை மாவட்டச் செயலாளர் சாமு. நாசர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், அக்னி ராஜேஷ், எஸ்.சங்கர், ஜெ.சரவணன், ஜெ.பாண்டுரங்கன், உமாபதி, சத்தியகிரி, இளங்கோ, துரை கோபல், பரிசமுத்து, பன்னீர்செல்வம், செல்வி, என்.ராஜி, விஜயசாரதி, ஆசைதம்பி, பி.ஜி.எம்.விநாயகம், மோதிஸ், நாராயணன், நரேஷ் சம்பத், கார்த்தி உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

## உடுமலைப்பேட்டை மேற்கு, உடுமலைப்பேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்

**திருத்தம்**

### தலைமைக் கழகம் அறிவிப்பு

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் வெளியிடப்பட்ட உடுமலைபேட்டை மேற்கு, உடுமலைபேட்டை மத்திய ஆகிய ஒன்றியங்கள் பிரிப்பு அறிக்கையில்;

திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைபேட்டை மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **பெரியபாப்பனூத்து ஊராட்சி உடுமலைபேட்டை மத்திய ஒன்றியக் கழகத்தின் கீழும்**

உடுமலைபேட்டை மத்திய ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த **கணபதிபாளையம் ஊராட்சி உடுமலைபேட்டை மேற்கு ஒன்றியக் கழகத்தின் கீழும்** இயங்கும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 14.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



பெரம்பூர் தெற்குப் பகுதி,44 வது வட்டக் கழகம் சார்பில்,பொது மக்களுக்கு நலத் திட்டங்கள் வழங்கி,கழக அரசின் சாதனைகளை விளக்கும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்திற்கு ப.பிரதீப் வரவேற்க,பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் முன்னிலை வகிக்க,வட்டச் செயலாளர் த.ஆறுமுகம் தலைமை தாங்கினார்.மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.,கழகத் தகவல் தொழில் நுட்ப அணியின் ஆலோசகர் கோ.வி.லெனின், கழகச் செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் பொள்ளாச்சி சித்திக் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். உடன் பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.நரேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர். கமலகண்ணன், மாவட்டப் பொருளாளர் வி.தயாளன்,சர்ப ஜெய தாஸ் எம்.சி., ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி., அ.தமிழ்செல்வன், டீ.கமலகண்ணணன், நா.சேகர், மு.சாகுல் அமீது, எஸ்.சாக்ரடீஸ், வி.வேதா, ஜோதிமணி ராதாகிருட்டிணன், வி.எஸ்.பிரபு, வட்டச் செயலாளர்கள்எஸ்.மனோகன்,க.பாபு,ஜி.மாரிமுத்து,கேபிள். கே.தினகரன்,வி.முருகன்,கே.வி.ராஜன்,என்.கார்த்திபன்,இரா.அரிதாஸ், மு.உமாபதி,சி.எஸ் ரவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.3.2024) முகாம் அலுவலகத்தில், ஜெர்மனியில் நடைபெற்ற சமையல் கலைத் திறனுக்கான ஒலிம்பிக் – 2024 போட்டியில் (Culinary Olympics) இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்ற சென்னையைச் சேர்ந்த மாணவி ஸ்ரேயா அனீஸ் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் சென்னை அமிர்தாஸ் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் தலைவர் பூமிநாதன், தலைமைச் செயல் அலுவலர் திருமதி கவிதா மற்றும் சமையல் கலை நிபுணர் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி மண்டலம் 2 .26 வது வார்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மருத்துவ காப்பீடு அட்டைகளை புதுப்பித்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி ஏற்பாட்டில் கழக நாடாளுமன்ற குழு தலைவரும் கழகப் பொருளாளர் டி.ஆர் .பாலு எம்.பி. அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கினார். அப்பொழுது மண்டலத் தலைவர் பல்லாவரம் வடக்கு கழக செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை. பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட். வட்டக் கழகச் செயலாளர் எஸ். முஜிபுர் ரகுமான். பகுதி கழக நிர்வாகிகள். வட்டக் கழக நிர்வாகிகள். உள்ளிட்டோர் உடன் இருந்தனர்

தென்னை விவசாயிகளின் நலன் - பயறு வகை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில்

# விலை ஆதரவுத் திட்டத்தில் தேங்காய் - உளுந்து - பச்சைப் பயறு கொள்முதல்!

## வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

சென்னை, மார்ச் 15 -

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நடப்பாண்டில் தமிழ்நாட்டில் தென்னைப் பயிரிடும் விவசாயிகளின் நலனைக் காத்திடவும், பயறு வகை சாகுபடியினை ஊக்குவித்து, உற்பத்தியினை அதிகரித்திடவும் விலை ஆதரவு திட்டத்தில் கொப்பரைத் தேங்காய், உளுந்து மற்றும் பச்சைப் பயறு கொள்முதல் செய்யப்பட உள்ளது.

**கொப்பரைத் தேங்காய் கொள்முதல்!**

தமிழ்நாட்டில் 4.577 இலட்சம் எக்டர் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகின்றது. தேங்காய்களை மதிப்புக்கூட்டி கொப்பரைகளாக விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். சமீப காலமாக, கொப்பரைத் தேங்காய்களின் விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை விட மிக குறைவாக இருந்து வருகின்றது.

தமிழகத்திலுள்ள கோயம்புத்தூர், திருப்பூர், தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, தேனி, ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், தென்காசி, புதுக்கோட்டை, திருப்பத்தூர், மதுரை, விருதுநகர், நாமக்கல், சிவகங்கை, வேலூர், இராமநாதபுரம், கரூர், தூத்துக்குடி, தருமபுரி, திருவாரூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், மற்றும் மயிலாடுதுறை ஆகிய 26 மாவட்டங்களில் உள்ள 75 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் கடந்த ஆண்டில் 48,364 விவசாயிகளிடமிருந்து 79,021.80 மெ.டன் அரவை கொப்பரை ரூ.858.176 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நடப்பாண்டு 2024ல் பந்துக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.120.00ம் மற்றும் அரவைக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.111.60ம் குறைந்தபட்ச ஆதரவு விலையாக வழங்கப்பட உள்ளது.

விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசினை வலியுறுத்தியதன் அடிப்படையில் 90,300 மெ.டன் என்ற அளவில் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு கொப்பரை கொள்முதலுக்கான அனுமதி ஒன்றிய அரசிடமிருந்து வரப் பெற்றுள்ளது. இத்திட்டம் 2024 நடப்பாண்டில் இன்று முதல் 10.06.2024 வரை நடைமுறைப்படுத்தப்படும்.

அதேபோல, பயறு அறுவடை காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியினால்



நியாயமான விலை கிடைக்காமல் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர். இத்தருணங்களில் விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் உளுந்து மற்றும் பச்சைப்பயறு ஆகியவற்றை விவசாயிகளிடமிருந்து நேரடியாக அரசு கொள்முதல் செய்து வருகின்றது.

தமிழ்நாட்டில் இன்று முதல் 10.06.2024 வரை தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, திண்டுக்கல், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், விருதுநகர், இராமநாதபுரம், இராணிப்பேட்டை, தேனி, கரூர், செங்கல்பட்டு, திருப்பூர், சேலம், நாமக்கல் ஆகிய 17 மாவட்டங்களிலும், 01.04.2024 முதல் 29.06.2024 வரை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை ஆகிய 7 மாவட்டங்களிலும் உள்ள 53 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் 1,42,780 மெட்ரிக்டன் உளுந்து குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட உள்ளது. உளுந்து கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ.69.50 வழங்கப்படும்.

மேலும், பச்சைப்பயறானது, இன்று முதல் 10.06.2024 வரை திருவள்ளூர் மாவட்டத்திலும், 01.04.2024 முதல் 29.06.2024 வரை தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய 5 மாவட்டங்களிலும் உள்ள 11 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் 1,860 மெட்ரிக்டன் பச்சைப்பயறு குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட உள்ளது. பச்சைப்பயறு கிலோ ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ.85.58 வழங்கப்படும்.

எனவே, தென்னை,உளுந்து, பச்சைப் பயறு பயிரிட்டுள்ள விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை அணுகி தங்களது பெயர்களை உரிய ஆவணங்களுடன் பதிவு செய்து அதிக அளவில் பயன்பெறுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

கோவை தெற்கு மாவட்டம்

# மதுக்கரை ஒன்றியம், ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **ஆர்.கார்த்திகேயன்** (68, பன்னீர் செல்வம் வீதி தெற்கு, ஒத்தக்கால்மண்டம், கோவை மாவட்டம் - 641 032) அவர்கள் ஒத்தக்கால்மண்டபம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.3.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

வார இறுதி நாட்களை முன்னிட்டு – தமிழ்நாடு

# அரசு போக்குவரத்துக் கழகம் வாயிலாக சிறப்பு பேருந்து இயக்கம்!

## அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தகவல்!

சென்னை, மார்ச் 15-

வார இறுதி நாட்களை முன்னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் வாயிலாக சிறப்பு பேருந்து இயக்கப்படுகிறது என அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த செய்தி வெளியீடு வருமாறு:-

15/03/2024 (வெள்ளிக்கிழமை) 16/03/2024 (சனிக்கிழமை) மற்றும் 17/03/2024 (ஞாயிறு) விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட் டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணா மலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 15/03/2024 (வெள்ளிக்கிழமை) அன்று 360 பேருந்துகளும் 16/03/2024 (சனிக்கிழமை) அன்று 420 பேருந்துகளும் மற்றும் சென்னை கோயம்பேட்டிலிருந்து நாகை, வேளாங்கண்ணி, ஒசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 15/03/2024 (வெள்ளிக்கிழமை) அன்று 70 பேருந்துகளும் மற்றும் 16/03/2024 (சனிக்கிழமை) அன்று 70 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்ப ட்டுள்ளது. ஆக தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக 15/03/2024 (வெள்ளிக்கிழமை) அன்று 360 சிறப்பு பேருந்துகளும் 16/03/2024 (சனிக்கிழமை) அன்று 420 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் மற்றும் பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட் டுள்ளது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது .



திருவள்ளூர் மாவட்ட பூவிருந்தவல்லி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட பூவிருந்தவல்லி நகராட்சியில் 9, 11, 12, 4, 16, 18, 19 நகராட்சி பொது நிதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ.10 கோடி மதிப்பிலான முடிவடைந்த தியானம் மையம், புதிய அங்கன்வாடி கட்டடம், சமுதாயக் கூடம், சீரமைக்கப்பட்ட குளம், புதிய கண்காணிப்பு கேமரா பணிகளை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து, புதிய சாலை உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் பூவிருந்தவல்லி நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், எச்.தாஜுதீன், துரைபாஸ்கர், அப்பர்ஸ்டாலின், டில்லிராணி மலர்மன்னன், எஸ்.அசோக்குமார், லயன் ஜெ.சுதாகர், ப.அன்ழுபகன், இரா.புண்ணியகோட்டி, சௌந்தரராஜன், கவுன்சிலர்கள் செந்தாமரை நெல்சன், தங்கம் திருமலை, ராஜகுரு, தீபாயுவராஜ், ஜேம்ஸ், வட்ட செயலாளர்கள் பழனி, சத்தியா, சரவணன், கராட்சி அதிகாரிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

1,196 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணை!

# சைதையில் ரூ.26.50 கோடி மதிப்பீட்டில் குழந்தை சிறப்புப் பிரிவுக்கான கட்டிட திட்டப் பணி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 15-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (14.03.2024) சென்னை, சைதாப்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனை வளாகத்தில் ரூ.26.50 கோடி மதிப்பீட்டில் பேறுகால பச்சிளங்குழந்தை சிகிச்சைப் பிரிவின் கூடுதல் தளங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னை சைதாப்பேட்டை புறநகர் மருத்துவமனை என்பது பழமைவாய்ந்த மருத்துவமனை ஆகும். சைதாப்பேட்டை பகுதியினை ஒட்டியுள்ள பகுதியான மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், சோழிங்கநல்லூர் போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்து மருத்துவம் பெற்ற ஒரு மகத்தான மருத்துவமனை. இம்மருத்துவமனையில் தினந்தோறும் 1000க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனைக்கு கூடுதல் வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வந்தது.

அந்தவகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு வசதியும் படிப்படியாக செய்யப்பட்டு வருகிறது. சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ஏற்கெனவே இம்மருத்துவமனைக்கு Xray வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் 13 டயாலிஸிஸ் இயந்திரங்களும் இம்மருத்துவமனையில் பயன்பாட்டில் இருந்துக் கொண்டிருக்கிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்னாள் ரூ.11 கோடி மதிப்பீடில் 31,388 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய கட்டிடம் கட்டுவதற்கான பணி தொடங்கப்பட்டது. அப்பணி தற்போது 80% முடிவுற்றிருக்கும் நிலையில் மீண்டும் இதே மருத்துவமனையில் பேருகால பச்சிளங்குழந்தை சிகிச்சைப் பிரிவு ரூ.15.50 கோடி மதிப்பீட்டில் 31,829 சதுர அடி பரப்பில் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இக்கட்டிடப்பணிகள் எதிர் வரும் ஆறு மாதங்களுக்குள் முடிவுற்றபிறகு தரைத்தளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய பிரம்மாண்டமான மருத்துவமனைக் கட்டிடம் பயன்பாட்டிற்கு கெண்டு வரப்படும். மேலும் இம்மருத்துவமனையில் 115 படுக்கை வசதிகள், 8 தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள், காது, மூக்கு, தொண்டை பிரிவு, 13 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் வார்டு அறை, ஸ்கேன் அறை, மருத்துவர்களுக்கான அறைகள், 3 அறுவை அரங்குகள், அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய அறை போன்ற ஏராளமான வசதிகளுடன் இம்மருத்துவமனை விரைவில் பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது. புதியதாக 3 முதல் 6 தளங்கள் வரையிலான கட்டிடங்கள் ரூ.26.50 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியினைத் தொடர்ந்து சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் மேற்கு ஜோன்ஸ் சாலை சாரதி நகர் பகுதியில் சாலைகளில் 23 மீன் வியாபாரம் செய்து கொண்டிருக்கும் கடைகள் இருந்துக் கொண்டிருந்தது. அக்கடைகள் போக்குவரத்திற்கு இடையூராக இருந்த காரத்தினால் அதற்கு மாற்றாக தற்போது புதிதாக 23 கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.25.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் அங்காடி கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட உள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் வெளிப்படைத்தன்மையுடன் மருத்துவக் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு மாதங்களில் 1021 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்ற தொடங்கியிருக்கிறார்கள்.

அதேபோல் கோவிட் காலங்களில் பணியாற்றிய MRB செவிலியர்கள் 977 பேருக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டு அவர்களும் தற்போது பல்வேறு மருத்துவமனைகளில் பணியாற்ற தொடங்கியிருக்கிறார்கள். கடந்த 20 நாட்களுக்கு முன்னாள் 332 ஆய்வக நுட்புநர்கள் பணியமர்த்தப்பட்டு தற்போது பணியில் இணைந்துள்ளார்கள்.

2015-ஆம் ஆண்டு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்ட மருத்துவப் பணியாளர்கள் எண்ணிக்கை 7,103 ஆகும். தற்போது ஒப்பந்த செவிலியர்களுக்கான காலிப்பணியிடங்கள் 483 என்கின்ற எண்ணிக்கையில் கண்டறியப்பட்டு அவர்களை பணிநிரந்தரம் செய்து இன்று 483 ஒப்பந்த செவிலியர்களை பணி நிரந்தரம் செய்து பணி ஆணைகள் வழங்க உள்ளோம்.

மேலும் 2019-ஆம் ஆண்டிற்கு பிறகு கோவிட் காலங்களில் 3000க்கும் மேற்பட்ட ஒப்பந்த செவிலியர்களுக்கு மாவட்ட நலவாழ்வு சங்கங்கள் மூலமாக பணி ஆணைகள் பெற்றிருக்கிறார்கள். கடந்த மாதம் 977 செவிலியர்கள் பணியில் அமர்த்தப்பட்டார்கள். அதுபோக தற்போது இந்த ஆண்டு செவிலியர்களுக்கான காலிப்பணியிடங்கள் கண்டறியப்பட்டுள்ளவை 713 ஆகும். எனவே MRB மூலம் 713 செவிலியர்கள் பணிநியமனம் செய்யப்படவிருக்கிறார்கள்.

2015-ஆம் ஆண்டு ஒப்பந்த செவிலியராக பணியில் சேர்ந்த 483 பேர் என ஒட்டுமொத்தமாக 1,196 செவிலியர்களுக்கு பணி நியமன ஆணைகள் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் வழங்கப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இதில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ.சங்குமணி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செங்கல்பட்டு மாவட்ட இணை இயக்குநர் மரு.தீர்த்தலிங்கம், சைதாப்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனை முதன்மை மருத்துவ அலுவலர் மரு.கென்னடி, உயரலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 34 வது வட்ட கழகம் சார்பில் திராவிட நாயகர் கழக தலைவரின் பிறந்தநாள் மற்றும் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் கே.வி.இராஜன் தலைமையில் நடைபெற்றது இதில் மாநில மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., Dr.கலாநிதிவீராசாமி எம்.பி. தொகுதி பார்வையாளர் சரவணன் பங்கேற்று 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர் பகுதி செயலாளர் அ.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் திறளாக பங்கேற்றனர்

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தோழர் சாரங்கபாணி
## மார்ச் 15 (1965)



மாயவரம் ஏ.வி.சி. கல்லூரியில் பயிலும் மாணவரான இவர், 1965ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் அன்று காலை கல்லூரிக்கு வந்து யாரும் காணாதபடி கல்லூரித் திடலில் தன்மீது மண்ணெண்ணை ஊற்றித் தீயிட்டுக் கொண்டு, "இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!" என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்த போது, அவரது முழக்கத்தை கேட்ட மாணவர்கள் தீயை அணைக்க முயன்று தோல்வியுற்றனர். குற்றுயிராக உள்ள சாரங்கபாணி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அங்கு "தமிழ்த் தாய்க்கு என் உயிரைத் தந்துவிட்டேன்" என்று கூறி முடிக்கவும் உயிர் பிரிந்தது.

சாரங்கபாணி மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களை முன்னின்று நடத்தியவர். மாயவரம் ரெயில் நிலைய அறப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், எஸ்.ஆர்.ராஜா, இ. கருணாநிதி, திருமதி. எம். வரலட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜே .மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி.எம். வரலட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜே.மேகநாதரெட்டி,மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## இந்தியாவில் யாராலும் எப்போதும் வீழ்த்த முடியாத

# ஒரு அரசியல் வீரராக கலைஞர் திகழ்ந்தார்!

### செங்கல்பட்டில் – ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்கும் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**செங்கல்பட்டு, மார்ச் 15–**

**இந்தியாவில் யாராலும் எப்போதும் வீழ்த்த முடியாத ஒரு அரசியல் வீரராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திகழ்ந்தார் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளுக்கு ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்’ வழங்கும் நிகழ்ச்சி நேற்று, செங்கல்பட்டில் நடைபெற்றது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாவில் கலந்துகொண்டு ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்’ உபகரணங்களை வழங்கினார்.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் புதிய விளையாட்டு வளாகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினர். இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, திருமதி. எம். வரலட்சுமி, எஸ்.எஸ்.பாலாஜி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜே.மேகநாதரெட்டி, விளையாட்டு வீரர் னுஷ், பாரா விளையாட்டு வீராங்கனை செல்வி. சங்கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டில் இன்றைக்கு செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கி, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12 ஆயிரத்து 600 கிராமப் பஞ்சாயத்துகளுக்கும், ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில், இந்த `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை மதுரையில் கடந்த மாதம் தொடங்கி வைத்தோம்.

**அதிக ஸ்போர்ட்ஸ் கிட் கொடுக்கும் நிகழ்ச்சி!**

இதுவரை மதுரை, கோவை, திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த 1,274 கிராம ஊராட்சிகளுக்கு ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’டை வழங்கி இருக்கிறோம். இன்று, இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து, கிரிக்கெட், வாலிபால், ஃபுட்பால், சிலம்பம் உள்ளிட்ட 33 வகையான விளையாட்டு உபகரணங்களைக் கொண்ட `கிட்’ஸை விளையாட்டு வீரர்களாகிய உங்களிடம் ஒப்படைக்கிறோம்.

இதுவரை நடைபெற்ற நிகழ்ச்சிகளிலேயே அதிக அளவிலான கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைக் கொடுக்கிற நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காஞ்சிபுரம் மாவட்டமாக இருக்கட்டும், செங்கல்பட்டு மாவட்டமாக இருக்கட்டும், இரண்டு மாவட்டங்களுமே ஏராளமான விளையாட்டு வீரர்களை நம் தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் கொடுத்திருக்கின்றன.

**சாதனை படைத்தவர்கள்!**

இந்த நிகழ்ச்சியில் கூட விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைத்த பல பேர் வந்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த நீச்சல் வீரர் தனுஷ் அவர்கள் இங்கு வந்திருக்கிறார். சர்வதேச அளவிலான நீச்சல் போட்டிகளில் 5 முறை இந்தியாவுக்காகப் பங்கேற்று பல்வேறு பதக்கங்களை வென்றவர்தான் சகோதரர் தனுஷ் அவர்கள்.

நேபாளில் 2019-ஆம் ஆண்டு நடைபெற்ற 13-வது சவுத் ஏசியன் கேம்ஸில் இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற 9-வது ஏசியன் ஏஸ் குரூப் அக்வாடிக் சாம்பியன்ஷிப்பில் ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றவர்.

சமீபத்தில் ‘கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டி’களை தமிழ்நாட்டில் நாம் நடத்திக் காட்டினோம். அந்தப் போட்டியில் 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என்று மொத்தமாக பதக்கப் பட்டியலில் 98 பதக்கங்களை வென்று, தமிழ்நாடு முதல் முறையாக இரண்டாவது இடத்தை அடைந்திருக்கிறது. இதிலும் தம்பி தனுஷ் அவர்கள் வெவ்வேறு பிரிவுகளில் 3 தங்கப் பதக்கங்கள், 3 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் வென்று, சாதனை படைத்திருக்கிறார்.

தனுஷ் மாதிரியான துடிப்பான வீரர்களால்தான் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில், அடுத்த முறை தமிழ்நாடு நிச்சயம் முதல் இடத்தைப் பிடிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது. கேலோ இந்தியா யுனிவர்சிட்டி கேம்ஸ்களிலும் 10 தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம் வாங்கியிருக்கிறோம்.

2009-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு சார்பாக, சப் ஜூனியர், ஜூனியர், சீனியர் ஸ்விம்மிங் சேம்பியன் போட்டிகளில் கலந்துகொண்டு இதுவரை 101 பதக்கங்களை வாங்கியிருக்கிறார் சகோதரர் தனுஷ் அவர்கள். இதுவரை மொத்தம் 402 பதக்கங்களைக் குவித்திருக்கிறார். 22 விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. 9 முறை தேசிய அளவிலான சாதனைகளைப் படைத்துள்ளார்.

**விளையாட்டுத் தலைநகராக உருவெடுக்கும்!**

தம்பி தனுஷ் மாதிரியான வீரர்களால் தமிழ்நாடு நிச்சயம் இந்தியாவின் விளையாட்டுத் துறை தலைநகராக உருவெடுக்கும் என்பதில் எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது. எல்லா தரப்பு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் வளர்ச்சிக்கு, நம் திராவிட மாடல் அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை நிற்கிறார்கள்.

குறிப்பாக மாற்றுத்திறனாளி வீரர்களின் வெற்றிக்கு, நம் விளையாட்டு மேம்பாட்டுத் துறை தொடர்ந்து உறுதுணையாக இருந்து வருகிறது. அதற்கு ஓர் உதாரணமாகத்தான் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வீல் சேர் ஃபென்சிங் வீராங்கனை தங்கை சங்கீதா அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். அவர் தனது முயற்சியால் கடந்த ஆண்டு ஒடிசா மற்றும் ஹரியானாவில் நடைபெற்ற நேஷனல் வீல் சேர் ஃபென்சிங் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார். அந்தத் தங்கைக்கு விளையாட்டு வீரர்களுக்கான மூன்று சதவிகித இட ஒதுக்கீட்டின் மூலம் வணிகவரித்துறையில் இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டுள்ளது.

அவருடைய குடும்பத்தில் அரசு வேலைக்குச் செல்லும் முதல் பெண், தங்கை சங்கீதா என்பதில் நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைகிறோம், பெருமை அடைகிறோம். அவருடைய வெற்றிப் பயணம் கண்டிப்பாகத் தொடர வேண்டும். அதற்கு நம் அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் எங்களுடைய துறையும் என்றைக்கும் அவருக்குத் துணை நிற்கும்.

இந்த இரண்டு பேரையும் அழைத்து நாம் இன்று கௌரவித்திருக்கிறோம் என்றால், இவர்கள் இரண்டு பேருமே இங்கு வந்திருக்கக் கூடிய அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக, ஒரு இன்ஸ்பிரேஷனாக உங்கள் முன் அமர்ந்து இருக்கிறார்கள்.

நம் விளையாட்டு மேம்பாட்டுத் துறை எடுத்து வருகிற பல முயற்சிகளைப் பாராட்டி `கான்ஃபிடரேஷன் ஆஃப் இந்தியன் இண்டஸ்டரீஸ்’ என்ற அமைப்பு நம் தமிழ்நாட்டிற்கு, நம் துறைக்கு ‘பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதை சென்ற மாதம் அளித்தார்கள்.

அது மட்டுமல்ல, ‘தி ஹிந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ என்ற புகழ் பெற்ற விளையாட்டுப் பத்திரிக்கை, 10 நாட்களுக்கு முன்பாக, ‘பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரொமோஷன் ஆஃப் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதை நம் துறைக்கு நம் அரசுக்கு வழங்கி இருக்கிறார்கள்.

`தமிழ்நாடு சாம்பியன் ஃபவுண்டேஷன்’ என்ற அறக்கட்டளையைத் தொடங்கி அதன் மூலம் ஏராளமான ஏழை, எளிய, மாற்றுத்திறன் கொண்ட விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறோம். இதுவரை 300-க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு ரூபாய் 6 கோடி அளவுக்கு தமிழ்நாடு சாம்பியன் ஃபவுண்டேஷன் மூலமாக உதவிகளை வழங்கி இருக்கிறோம்.

**650 வீரர்கள், ரூ.16 கோடி ஊக்கத்தொகை!**

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் நம் வீரர், வீராங்கனைகளுக்குத் தொடர்ந்து உயரிய ஊக்கத்தொகையையும் வழங்கி வருகிறோம். கடந்த வாரம் கிட்டத்தட்ட 650 விளையாட்டு வீரர்களுக்கு 16 கோடியே 24 லட்சம் ரூபாயை உயரிய ஊக்கத்தொகையாக வழங்கியிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, கேலோ இந்தியா யூத் கேம்ஸ், ஏசியன் கப் ஹாக்கி டோர்னமெண்ட், ஸ்குவாஷ் வேர்ல்டு கப், வேர்ல்டு சர்ஃபிங் லீக், சைக்ளத்தான், சென்னை செஸ் மாஸ்டர்ஸ் 2023, சென்னை செஸ் ஒலிம்பியாட், நேஷனல் ஹாக்கி டோர்னமென்ட் போன்றவற்றையும் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் நடத்தி வருகிறோம்.

விளையாட்டுத்துறை வளர்ச்சி என்பது நகரங்களில் மட்டும் நின்றுவிடக் கூடாது. கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும். கிராமங்களில் இருந்து நிறைய விளையாட்டு வீரர்கள் வரவேண்டும் என்ற அடிப்படையில்தான் இன்றைக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம்.

இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் புத்துணர்ச்சியோடும் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலைஞரின் பெயரில் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், விளையாட்டுத் துறையின் சார்பாக கலைஞர் பெயரில் ஒரு திட்டத்தைத் தொடங்கி இருக்கிறோம் என்றால், அது இதுதான் முதல் முறை. அதுவும் கலைஞரின் நூற்றாண்டில் தொடங்கியிருக்கிறோம் என்பது எங்களுக்கு மிகப்பெரிய பெருமை.

**விளையாட்டில் ஆர்வம் கொண்டவர்!**

கலைஞர் அவர்களுக்கு அரசியல்வாதி, இலக்கியவாதி, பேச்சாளர், எழுத்தாளர் இப்படிப் பல முகங்கள் உண்டு. ஆனால், விளையாட்டுக்கும் கலைஞருக்கும் என்ன தொடர்பு எதற்காக இந்தத் திட்டத்திற்கு அவர் பெயரை வைத்தீர்கள் என்று உங்களில் சில பேருக்கு சந்தேகம் இருக்கும். கலைஞர் அவர்கள் தன்னுடைய சிறுவயதிலேயே களத்தில் இறங்கி விளையாடியவர்தான்.

அதன் பிறகு அரசியலுக்கு வந்ததால், அவர் விளையாட்டில் கவனம் இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், அவர் எப்போதும் விளையாட்டில் ஆர்வம் கொண்டிருந்தவர்தான். ஒரு விளையாட்டு வீரனுக்குத் தேவையான திறமைகள் என சிறப்பான ஆற்றல், கூர்மையான கவனம், தோல்வியிலும் துவண்டுவிடாத மனத்திடம், அனைவரையும் அரவணைத்துச் செல்லும் குழு முயற்சி என சொல்லிக் கொண்டே போகலாம். அத்தனை திறமைகளும் கலைஞர் அவர்களிடம் இருந்ததால் தான் இந்தத் திட்டத்திற்கு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ என்று பெயர் சூட்டினோம்.

**அரசியல்- சினிமா- இலக்கியம் மூன்றிலும் இயங்கியவர்!**

கலைஞரின் ஆற்றலுக்கு நிகரான ஆற்றலைக் கொண்ட இன்னொரு தலைவரை நீங்கள் பார்க்கவே முடியாது. இன்றைக்கு நான் சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்கு வருகிறேன், காஞ்சிபுரத்துக்கு வருகிறேன் என்றால், இவ்வளவு சாலை வசதிகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், எந்த வசதியும் இல்லாமல், எந்தச் சாலை வசதிகளும் இல்லாமல், 50 வருடத்திற்கு முன்பு தமிழ்நாடு முழுக்கப் பயணம் செய்து இந்த இயக்கத்தை வளர்த்தது, தமிழ்நாட்டைக் காத்தது, மக்கள்நலத் திட்டங்களைத் தீட்டியது என எல்லாவற்றையும் செய்தவர்தான் கலைஞர். ஒரே நேரத்தில் அரசியலிலும் சினிமாவிலும் இலக்கியத்திலும் இயங்கினாலும், எங்கெல்லாம் அவர் கால் வைத்தாரோ அங்கெல்லாம் கொடிகட்டிப் பறந்தவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அதற்கு எந்த அளவுக்கு அவருக்கு ஆற்றல் இருந்திருக்க வேண்டும்? எந்த அளவுக்கு அவர் உழைத்திருக்க வேண்டும் என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர் எப்போது தூங்கப் போகிறார், எப்போது எழுந்திருக்கிறார், எப்போது `முரசொலி’க்குப் போகிறார், எப்போது கோட்டைக்குப் போகிறார், எப்போது அறிவாலயத்திற்குப் போகிறார் என்று தெரியாத அளவிற்கு உழைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

கலைஞரிடம் கூரிய மதி இருந்தது. நாம் இன்று என்ன பேசினால், எதிர்த் தரப்பில் இருப்பவர்கள் என்ன பேசுவார்கள், அவர்களுக்கு நாம் என்ன பதில் சொல்ல வேண்டும் என்று அவருக்குத் தெளிவாகத் தெரியும். அந்த `ஷார்ப் மைண்ட்’ ஒவ்வொரு விளையாட்டு வீரனுக்கும் மிக, மிக முக்கியம். நாம் இன்றைக்கு எப்படி ஆட வேண்டும். இதற்கு எதிரணியினர் எப்படி விளையாடுவார்கள். அதற்கு நாம் எப்படி சமாளித்து விளையாட வேண்டும் என்று கலைஞரைப் போல சிந்திக்க வேண்டும்.

நேற்று (14.3.2024) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், சென்னைகன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தின் மூலம் நடைபெறும் சாலைப் பணிகள் குறித்த உயர்மட்டக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்ட இயக்குநர் ஆர்.செல்வராஜ், நிதித்துறை சிறப்பு செயலாளர் பிரசாந்த் வடநேரே, நிதித்துறை துணைச் செயலாளர் சிபி ஆதித்யா செந்தில்குமார், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் எம்.கே.செல்வம் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அ.ரேவதி எம்.சி. தலைமை! எஸ்.முரளி முன்னிலை!

## மயிலையில் நல உதவிகள் வழங்கும் விழா!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. வழங்கினர்!

சென்னை, மார்ச் 15-

எல்லோருக்கும் எல்லாம் மயிலை கிழக்கு பகுதி மகளிர் அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் பிறந்தநாளை முன்னிட்டு மங்கையர்களை வாழ்த்தும் விழா மற்றும் நலத்திட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அ.ரேவதி எம்.சி. தலைமையில் எஸ்.முரளி, துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி, கீதா முரளி, விமலா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நலத்திட்ட உதவிகளை சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு மற்றும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் மகளிருக்கு நலத்திட்டங்கள் வழங்கினர்.

இதில் மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மகளிர் அணியினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

கவிதா குமரி முத்து நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியை அ.ரேவதி எம்.சி. ஏற்பாடு செய்து இருந்தார்.





காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாங்காடு நகரம், பட்டூரில் ஒரு கோடியே 17 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒன்றிய துவக்க பள்ளியை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். இதில் கு.செல்வபெருந்தகை எம்.எல்.ஏ., நகர் மன்றத் தலைவர் சுமதி முருகன், நகரச் செயலாளர் – நகர் மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா, கமிஷனர் மு.ராணி, ஆர்.டி.ஓ. வெங்கடேசன் ஆகியோர் பங்கேற்றனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

## வில்லிவாக்கம் மேற்கில் கழகத் தலைவர் முதல்வர் பிறந்தநாள் விழா புகழரங்கம்!

### திருச்சி சிவா எம்.பி.- ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் - சபாபதிமோகன் புகழுரை! கூ.பீ.ஜெயின் தலைமை!

சென்னை, மார்ச். 15

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு "உலகில் உயர்வு தமிழ் அறம்! உன்னதம் முதல்வரின் திராவிடம் "சூரிய சுடர் 69, மாபெரும் புகழரங்கம் இன்று (15.3.2024 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில், வில்லிவாக்கம் பேருந்து நிலையம் அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளரும், 8 வது மண்டலக் குழுத் தலைவருமான கூ.பீ.ஜெயின் தலைமை தாங்குகிறார்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா எம்.பி, முன்னாள் காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், பேராசிரியர் சபாபதி மோகன் புகழுரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில் வே.வாசு, சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி, சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், லதா வாசு எம்.சி, ஆர்.வரதன், ஜி. ஜெ.பிரபு, எம்.சுரேஷ், ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, மு.கலைச்செல்வி, ஐ.சி.எப். சுரேஷ்பாபு, சிட்கோ சேகர், க.சுகுமாரன், பா. ஜானி, சொ.முருகேசன், ப. லோகுபாபு, ஜெ.தங்கராஜ், ஆர்.கோபாலகிருஷ்ணன், மா.கபிலன் கோ.மணி வேந்தன், பா.தே.தீனதயாளன், கே.எஸ்.பாபு, க.மணிமாறன், எஸ்.கே.பி.தீபக்குமார், ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், சிட்கோ பி.சுரேஷ்பாபு, பூ.சத்தியேந்திரன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புகிடங்கு தலைவரும், தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளரும், வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பார்வையாளர் வே.கௌதமன், எம். பி.ரஞ்சன்குமார், ஜான்சன் (எ) ஜெயேந்திரர், தனலட்சுமி சரவணன் எம்.சி., ஆ. பிரிய தர்சினி எம்.சி., கே. எஸ்.ரவிச்சந்திரன், பி. கே.மூர்த்தி, கே.சந்துரு, சங்கரிநாராயணன், எஸ்.மணிமூடி, கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், என்.வி. எம்.ஷேக்அப்துல்லா, வே. உமாகாந்த, சி.மகேஷ்குமார், பரிதி இளம்சுருதி, வழக்கறிஞர் இந்திரஜித், கோ.ஏகப்பன், தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன், இசட். ஆசாத், சொ.வேலு, சரிதாமகேஷ்குமார், பா.ஸ்ரீராமுலு, டாக்டர் ஜி.சாந்தகுமாரி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ. நாகராசன், டி.எஸ்.பி.ராஜாகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வி.சுதாகர், எஸ்.முரளி,எஸ்.இராஜசேகர், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி. ஜெ.துளசிங்கம், லயன் பி.உதயசங்கர், ரமேஷ் (எ) நீலகண்டன், எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர். ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி, டி. லோகேஷ், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், அற.டி.சங்கர்நானா, நா. துலுக்காணம், எல்.பி.எப். மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரிஸ்ரீதர், ஜி.வி.நாகவள்ளி, எம்.பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், அற.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், க.பா.பிரதீப்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, து.ஆயிரம், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபல்யு.அமுல், நா.அறிவுடைநம்பி, எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி.செ.துரை, வி. சபாபதி, வ.ரமேஷ்பாபு, மு. பரமானந்தன், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்தியநாராயணன், கி.ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ். துரைபாபு, கே.ராஜா, வி. ஆர்.ஜெயக்குமார், எஸ். எஸ்.மணிகண்டன் சிட்கோ எஸ்.அன்வர்தீன், ப.மலர்கொடி, சாந்திபில்லி, தே.ச. சுந்தர், ஜி.கே.வெங்கட், வழக்கறிஞர் பி.கோபிலதா, வழக்கறிஞர் ஜெ.சரவணன், வழக்கறிஞர் மா.முரளி, வினோத், வழக்கறிஞர்.என். விஜயகுமார், ஓசோன் மனோகரன், பொறியாளர் எம்.எஸ்.ரமேஷ், டாக்டர் எம்.ஜி.திவ்யானந்தன், வழக்கறிஞர் சாந்தனு, ஸ்டண்டு வி.புஷ்பராஜ், ஜிம்.முரளி (எ) சையத், டி.பாஸ்கரன், ச.காளிதாசன், சிட்கோ த.விஜயகுமார், கே.தங்கவேல்ராஜன், டி.சையத்தியமத்துல்லா மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி வட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு வட்டச் செயலாளர்கள் ஆர்.தீனதயாளன், மா.அகிலன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கர்நாடக தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா - கருத்தரங்கம்!

### போர் முரசு கதிரவன் தலைமை!

பெங்களூர், மார்ச் 15

கர்நாடக மாநிலத் தி.மு.க. இலக்கிய அணி சார்பில் தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் 71 வது பிறந்தநாள் விழா பெங்களூரில் நாளை 16ஆம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பெங்களூர் தமிழ் சங்க அரங்கத்தில் இந்த விழா நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் கர்நாடக மாநில தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இரா. அன்புதமிழ் தாய் வாழ்த்து பாடி வரவேற்புரை ஆற்றுகிறார். கர்நாடக மாநிலத் தி.மு.க. இலக்கிய அணி செயலாளர் போர் முரசு கதிரவன் தலைமை தாங்குகிறார்.

கவி மலர் வ.மலர்மன்னன சி.வரதராஜன், மாநில இலக்கிய அணி துணைத்தலைவர் சி.கண்ணன், வெல். செல்வகுமார், மு.பழனி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.ராமசாமி, மாநில அவை தலைவர் மொ. பெரியசாமி மாநில பொருளாளர் கே.தட்சிணாமூர்த்தி மாநில துணை அமைப்பாளர் ஜி.ராம லிங்கம், மாநில தி.மு.க. துணை அமைப்பாளர் குமுதா கருணாநிதி, கர்நாடக மாநில தி.மு.க. முன்னாள் இந்நாள் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா, ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், தலைமை இலக்கிய அணி பொருளாளர் ந.சந்திரபாபு, வேலூர் மாவட்ட இந்து அறநிலையத்துறை தலைவர் அசோகன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்த விழாவில் வி.எஸ். மணி, செ. தமிழ்ச்செல்வன், ஏ.டி.ஆனந்தராஜ், கே.எஸ் சுந்தரேசன், கே.ஜி.எப். கரிகாலன், ஆ.கரிகாலன், கர்நாடக மாநில தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் டி.சிவமலை, துணை அமைப்பாளர் டி.விகாஷ், துணை அமைப்பாளர் பரசுராம், துணை அமைப்பாளர் டி.ராஜசேகர், துணை அமைப்பாளர்முருகானந்தம், துணை அமைப்பாளர் லியோ, துணை அமைப்பாளர் விக்ரம், பொன்னியின் செல்வன், கர்நாடக மாநில தி.மு.க. மகளிர் அணி செயலாளர் சற்குணம் இளமதி, துணைச்செயலாளர்கள் மங்கம்மா, காயத்ரி, பிரபு ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கிளைக் கழக துணை செயலாளர் மு.தாமோதரன் நன்றி கூறுகிறார்.

இந்த விழாவில் தளபதி பிறந்தநாள் முன்னிட்டு கருத்தரங்கம் நடைபெறுகிறது. இந்தக் கருத்தரங்கத்திற்கு புலவர் கி.சு.இளங்கோவன் தலைமை தாங்குகிறார். மிசா ஸ்டாலின் என்ற தலைப்பில் இரா. அன்பு, மேயர் ஸ்டாலின் என்ற தலைப்பில் அமுதபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் என்ற தலைப்பில் சற்குணம், இளமதி, துணை முதல்வர் ஸ்டாலின் என்ற தலைப்பில் தங்கவயல் கரிகாலன், முதல்வர் ஸ்டாலின் என்ற தலைப்பில் வி.எஸ்.மணி ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இதைத் தொடர்ந்து சிறப்பு நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நா.கார்த்திக் - தொ.அ. ரவி - தளபதி முருகேசன் பங்கேற்பு !

## கழக சட்டத்துறை சார்பில் கோவை மாநகர் மாவட்டத்தில் 'வார் ரூம்' !

### என்.ஆர்.இளங்கோ எம்.பி.திறந்து வைக்கிறார்! அன்புச் செழியன் வேண்டுகோள்!

கோவை, மார்ச் 15-

கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச் செழியன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

திராவிட முன்னேற்றக் கழக சட்டத்துறையின் சார்பாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் தி.மு. கழக வழக்கறிஞர் அணியின் மூலம் WAR ROOM என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் தேர்தல் சம்பந்தமான அனுமதிகள் புகார்கள், விசாரணைகள் போன்றவற்றிற்கு உதவிகரமாக கழக வழக்கறிஞர்கள் சிறப்பான முறையில் பணி புரிய உள்ளார்கள்.

மேற்படி WAR ROOM கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் கோவை க்ராஸ்கட் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் (இன்று 15.3.2024 வெள்ளிக்கிழமை) முற்பகல் 11.30 மணிக்கு கழக சட்டத்துறை செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட ஒருங்கிணைந்த மாவட்ட கழக செயலாளர்கள் நா. கார்த்திக்,தொ.அ.ரவி, தளபதி முருகேசன், சட்டத்துறை இணைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர்கள் கே.எம். தண்டபாணி பி.ஆர். அருள்மொழி மா.சு.ராதாகிருஷ்ணன் தலைமைக் கழக வழக்கறிஞர் கே. ஜே.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

இந்த சிறப்புமிக்க நிகழ்வில் நமது கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் அன்புச் செழியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் – ஊத்தங்கரை

## பேரூர் செயலாளர் இரா.பாபு சிவக்குமார் மறைவு!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அஞ்சலி!



கிருஷ்ணகிரி, மார்ச் 15

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை பேரூர் கழகச் செயலாளர் இரா.பாபுசிவகுமார் நேற்று (14.3.2024) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துறோம்.

செய்தியறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழகத்தினர் நேரில் சென்று மறைந்த இரா.பாபு சிவக்குமார் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடி, பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர், கழக தலைவர் முதல்வர் ஆகியோருடன் கழகத்தில் பல்வேறு பணிகளை திறம்பட பணியாற்றிய பெருந்தகை.

ஆரம்ப காலத்தில் இருந்து கழகத்தில் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு கழகத்திற்காக பணியாற்றியவர். கடந்த காலங்களில் இளைஞர் அணியில் பணியாற்றி பெருமை சேர்த்தவர், ஒன்றிய பொருளாளராக பணியாற்றியவர்.

கடந்த 1986 ஆம் ஆண்டு முதல் 38 ஆண்டு காலமாக தொடர்ந்து ஊத்தங்கரை பேரூராட்சியின் பேரூர் கழக செயலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தவர். கடந்த 1986 ஆம் ஆண்டு ஊத்தங்கரை பேரூராட்சி தலைவராக பணியாற்றியவர்.

கடந்த 1998 ஆம் ஆண்டு தலைமை கழக பொதுக்குழு உறுப்பினராக பணியாற்றியவர். ஊத்தங்கரை நகர வங்கி தலைவராகவும், ஊத்தங்கரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளராகவும் பணியாற்றியவர்.

கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்ட அனைத்து போராட்டங்களிலும், ஆர்ப்பாட்டங்களிலும் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டு சிறை சென்றவர் ஆவார்.

இவருக்கு ஞானம்மாள் என்கிற மனைவியும், பா.சோமசுந்தரம், பா.தீபக் என்ற இரு மகன்களும் உள்ளனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 9**

கலைஞர் 100 1924 - 2023

ம.அ.9.ந.க.எண்.இ1/1753/2024

**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை**
**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது**

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு (ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
| --- | --- | --- | --- |
| ம.அ.9.ந.க.எண்.இ1/1753/2024 மண்டலம் - 9, பகுதி - 26, வார்டு - 113ல் கோடம்பாக்கம் பிரதான சாலையில் உள்ள டயாலிசிஸ் மையத்திற்கு மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்து பராமரிக்கும் பணிக்கு | ரூ.64.36/- இலட்சங்கள் | ரூ.65,000/- | இரண்டாம் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 20.03.2024 மாலை 03.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 21.03.2024 மாலை 3.30 மணி

மா.வ.அ / மண்டல அலுவலர்
மண்டலம்- 9

செ.ம.தொ.இ / 1621 / ஒப்பந்தப்புள்ளி / 2024






கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் மு.மேகநாதன் தலைமையில் 671 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பகுதிக் கழகச் செயலாளர்கள் கே. கண்ணன் எம்.சி, மு.இராசா எம்.சி. ஆகியோர் பொதுமக்களுக்கு வழங்கினர். இந்நிகழ்வில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.டி.தங்கராஜ், சோ.செந்தில்குமார், மு.அன்பழகன், பூக்கடை பழனிச்சாமி, பி.கே.குமார், சதீஷ் கண்ணன், மு.கோவிந்தராஜ், அஜந்தா ரவி, வாட்டர் விஜயகுமார், சசிகுமார், நிஷா சையத், ராமமூர்த்தி, பாரி நகர் சசிகுமார், சா.ர.சீனிவாசன், ஆர்.டி.நல்லேந்திரன், நந்தகோபால், விநாயகம், ர.பா.சீனிவாசன், ரேணுகாதேவி, சண்முகம், அசோக் குமார், பூபதி, சுரேஷ், மகேந்திரன், சுதா, செண்பகவல்லி, ஆர்.கே.ஆனந்த், சுரேஷ், ரவிகரன், ஜெகதீஸ்வரன், ராஜசேகர், அனல் ஐயப்பன், ச.கார்த்திக், பாலா, ஜஹாங்கீர், சரவணன், விக்கி, கோபி, தென்னரசு, கோபி, பிரேம், கேப்டன் குமார், சுந்தர், முருகன், சங்கர் கணேஷ், இ.கார்த்திக், யுவராஜ், கோபி, குமார், எழில், கௌதம், விக்கி, மோகன், சரத், ரமேஷ், நாகராஜ் மற்றும் கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், வீரவநல்லூர் பேரூரைச் சேர்ந்த எம்.அப்துல்ரகுமான் அவர்கள், தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.03.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜே.எஸ். இராசு
**மார்ச் 15 (2000)**



கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டவர். ஆரம்பக் காலத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியராகவும் பணிபுரிந்தவர்.

கழக இதழ்களில் கதை, கட்டுரை, கவிதைகள் எழுதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியவர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

தமிழக சட்டப்பேரவைக்கு பெரம்பலூர் தொகுதியிலிருந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் சட்டமன்ற மேலவை, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

"பெரம்பலூர் பகுதியில் ஆதிதிராவிட சமுதாயத்தில் தோன்றிய இராசு கழகத்தை வளர்த்திட அரும்பாடுபட்டவர். தெளிவான சிந்தனையாளர். தேனருவியெனப் பேசும் சொற்பொழிவாளர். தி.மு.கழகத்தின் மாசுமருவற்ற செயல்வீரர்" எனத் தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகள்!

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

**திருவண்ணாமலை மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | கோ.செல்வம் |
| சமுகவலைதளம் | இ.பிரதாப் |
| மகளிர் | திருமதி. க.அகிலா |

**தண்டராம்பட்டு கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | தே.கருணாநிதி |
| சமுகவலைதளம் | அ.முத்துகிருஷ்ணன் |
| மகளிர் | திருமதி. க.ஜெயா |

### கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்ற தொகுதி

**கீழ்பெண்ணாத்தூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | ரா.சுரேஷ் |
| சமுகவலைதளம் | ர.சின்னா |
| மகளிர் | செல்வி.அ.மோகனபிரியா |

**கீழ்பெண்ணாத்தூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | பா.ருசிதரன் |
| சமுகவலைதளம் | அ.ராஜா |
| மகளிர் | திருமதி.சு.வனிதா |

**கீழ்பெண்ணாத்தூர் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | வ.கிருபாகரன் |
| சமுகவலைதளம் | செ.வெங்கடேசன் |
| மகளிர் | திருமதி.ரா.கீதா |

**துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | ஜெ.கோபி |
| சமுகவலைதளம் | ம.கிருஷ்ணகாந்த் |
| மகளிர் | செல்வி.கா.கௌசல்யா |

**துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | த.மணிமாறன் |
| சமுகவலைதளம் | ரா.விஜி |
| மகளிர் | திருமதி.கோ.ரேகா |

**திருவண்ணாமலை கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | ரா.பிரபு |
| சமுகவலைதளம் | செ.பவுன் குமார் |
| மகளிர் | திருமதி.ப.சரண்யா |

**கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | கி.பார்த்திபன் |
| சமுகவலைதளம் | அ.நசீர் அகமத் |
| மகளிர் | திருமதி.ரா.அம்பிகா |

**வேட்டவலம் பேரூராட்சி ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | வெ.மணிவண்ணன் |
| சமுகவலைதளம் | ரா.அகத்தீஸ்வரன் |
| மகளிர் | திருமதி.கி.ஜெயப்பிரதா |

### கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதி

**கலசப்பாக்கம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | க.பச்சையப்பன் |
| சமுகவலைதளம் | த.கண்ணன் |
| மகளிர் | திருமதி.பு.அர்ச்சனா |

**கலசப்பாக்கம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | சு.சதீஷ் |
| சமுகவலைதளம் | ஹ.நிஷார். |
| மகளிர் | திருமதி.சு.தஸ்ரின் |

**கலசப்பாக்கம் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | ஜெ.பழனி |
| சமுகவலைதளம் | வெ.விநாயகம் |
| மகளிர் | திருமதி.பா.பிரியா |

**புதுப்பாளையம் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | த.அன்பரசு |
| சமுகவலைதளம் | இரா.அரவிந்த் |
| மகளிர் | திருமதி.கு.அம்மு |

**புதுப்பாளையம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | டி.ரஷ்யன் |
| சமுகவலைதளம் | ரா.ஜயப்பன் |
| மகளிர் | திருமதிச.பச்சையம்மாள் |

**புதுப்பாளையம் பேரூராட்சி ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | சி.கலைவேந்தன் |
| சமுகவலைதளம் | கா.கோபி |
| மகளிர் | திருமதி.வெ.மாலவிக்கா |

**போளூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | செ.அன்பு |
| சமுகவலைதளம் | து.சசிகுமார் |
| மகளிர் | திருமதி.ர.லலிதா |

**ஜவ்வாது மலை வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | ப.திருமால் |
| சமுகவலைதளம் | கோ.முனுசாமி |
| மகளிர் | திருமதி.மு.அனிதா |

### செங்கம் சட்டமன்றத் தொகுதி

**செங்கம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | வீ. ஆதவன் |
| சமுகவலைதளம் | வெங்கடேசன் |
| மகளிர் | திருமதி. திருமங்கை |

**செங்கம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | செல்வகுமார் |
| சமுகவலைதளம் | ஆனந்த் பலராமன் |
| மகளிர் | திருமதி. K. விஜயலட்சுமி |

**செங்கம் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | அம்பேத்கர்.சி |
| சமுகவலைதளம் | பரசுராமன்.இ |
| மகளிர் | திருமதி. மோனிஷா ராஜவேல் |

**செங்கம் மத்திய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | இ. புகழ் |
| சமுகவலைதளம் | மாரி.K |
| மகளிர் | திருமதி. வினோதினி.R |

**செங்கம் பேரூராட்சி ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | கமல் ராஜ் . ப |
| சமுகவலைதளம் | மோகன்.சு |
| மகளிர் | திருமதி. அலமேலு. சு |

**தண்டராம்பட்டு மத்திய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | தினகரன் |
| சமுகவலைதளம் | விக்னேஷ் |
| மகளிர் | திருமதி. லோ. கனிமொழி |

**தண்டராம்பட்டு மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | காண்டீபன் |
| சமுகவலைதளம் | பாப்டிஸ் |
| மகளிர் | திருமதி. கோமதி.பூ |

**ஜவ்வாதுமலை தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| களப்பணி | பா. மோகன்ராவ் |
| சமுகவலைதளம் | பா. ஜெகன் |
| மகளிர் | திருமதி. வி. வினோதினி |

**அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா**
செயலாளர்
தகவல் தொழில்நுட்ப அணி - தி.மு.க

## சென்னை வடக்கு மாவட்ட அணிகளின்

# அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வு கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, மார்ச் 15 -

சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடக்கு மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வு கூட்டம் என்னுடைய தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், தொகுதி பொறுப்பாளர்கள் வழக்கறிஞர் ஏ.சரவணன், என்.நவீன், நந்தனம் நம்பிராஜன் ஆகியோர் முன்னிலையில் எண்.1, முதல் பிரதான சாலை, சர்மா நகர் (எனது அலுவலகம்) விலாசத்தில் கீழ்கண்ட தேதிகளில் கீழ்கண்ட அணிகளின் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், சம்பந்தப்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்



பாளர்கள் அவர்களுக்கான தேதிகளில் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து

குறிப்பு : கூட்டத்திற்கு வருகை தரும் போது மாவட்ட அமைப்பாளர்கள் தவறாமல்மினிட் புத்தகம் கொண்டு வரவும்.

இன்று (15.03.2024 வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணி நெசவாளர் அணி, இலக்கிய அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி,

காலை 10.30 மணி பொறியாளர் அணி, வழக்கறிஞர் அணி, சிறுபான்மையினர்நல உரிமைப்பிரிவு ,

காலை 11.00 மணி அயலக அணி, தொழிலாளர் அணி,

காலை 11.30 மணி தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தகர் அணி

காலை 12.00 மணி கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை, தொண்டர் அணி காலை 12.30 மணி ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

# 113 'அ' வட்டத்தில் திண்ணைப் பிரச்சாரம்!

### நே.சிற்றரசு - தயாநிதி மாறன் - நா.எழிலன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 15

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 113வது "அ" வட்ட தி.மு.க. சார்பில் இல்லம் தோறும் கழக தலைவர் முதலமைச்சர் அவர்களின் குரல் திண்ணை பிரச்சாரம் இன்று (15.03.2024, வெள்ளிக்கிழமை), தருமாபுரம் மெயின் ரோடு, மாதா கோயில் அருகில், மாலை 06.00 மணியளவில் நடைபெறுகிறது.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர். நா .எழிலன் மற்றும் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.ப. அன்புதுரை, ஆயிரம் விளக்கு தொகுதி பொறுப்பாளர் டாக்டர். கலை கதிரவன்,

பாக பொறுப்பாளர் பி.ஆர்.திருமலை, ஆ. கி .ப. து. செயலாளர் மு. வெங்கடேசன், து. செயலாளர் கோ. ரவி, பாக பொறுப்பாளர் எம்.விந்தியா ஆகி யோர் பங்கேற்கிறார்கள்.

வட்ட கிளை கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக, மகளிர் அணி, மற்ற அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு 113 "அ" வட்ட கழக செயலாளர் த.தேவராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.



இராயபுரம் கிழக்கு கல்லறைச் சாலை குடியிருப்பு வாசிகளுக்கு, தற்காலிக ஒதுக்கீடு ஆணை மற்றும் கருணை தொகை ரூபாய்.24,000 இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி வழங்கினார். அதைத் தொடர்ந்து நேற்று (14.03.2023) இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மீதமுள்ள 104 பயனாளிகளுக்கு ரூ.24000/ கருணைத் தொகை வழங்கினார். இந்நிகழ்வில் இராயபுரம் பகுதி செயலாளர்கள் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், ஈ.ஈ. இளம்பருதி, வட்டச் செயலாளர்கள் என். கண்ணன், ஆறுமுகம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உயர் அதிகாரிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பயனாளர்கள் இருந்தனர்..

# தி.மு.க. வழக்கறிஞர் அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. வழக்கறிஞர் அணிச் செயலாளர் என்.ஆர். இளங்கோ அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு, தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் வடக்கு மாவட்டம்**

**திருப்பூர் வடக்கு மாநகரம்**

தலைவர் - கே. ரவி 106, 18, பொன்மணி டவர் அனுப்பர்பாளையம் புதூர் திருப்பூர் - 641 652

துணை தலைவர் - திருமதி. எம். அமுதா 8 /3514 , அண்ணா நகர் கணபதிநகர், முதல் வீதி நெருப்பெரிச்சல் திருப்பூர் - 641 602

அமைப்பாளர் - **பா. கருணாநிதி** 21/11, காளியம்மன் கோவில் வீதி டிமாண்ட் 1- வீதி திருப்பூர் - 641 604

துணை அமைப்பாளர்கள் - எம். தேவநேசன் விநாயகா டவர்ஸ் 2 வது தளம் தென்னம்பாளையம் திருப்பூர் - 641 604 அருண் சிவாசலம் 2/437 டி, பாலாஜி நகர் வடக்கு காங்கேயம் ரோடு, முதலிபாளையம் திருப்பூர் - 641 606 எஸ். நவநீத கிருஷ்ணன் 3/432, அண்ணாநகர் ஆத்துபாளையம் திருப்பூர் - 641652 அ. சரவணன் சுபாஷ் சந்தர் 8 /395, பொன்னம்மாள் நகர் 3- வீதி பாண்டியன் நகர் திருப்பூர் - 641 601 எம். வசந்தன் 43, ஈடன் கார்டன் பாலாஜி நகர் ராக்கியாபாளையம் திருப்பூர் - 641 654

**திருப்பூர் தெற்கு மாநகரம்**

தலைவர் - ஏ. சூரியபிரகாஷ் 200/7 பி ,விநாயகா டவர்ஸ் 2 வது தளம் தென்னம்பாளையம் திருப்பூர் - 641 604

துணை தலைவர் - பி. திங்களவள் 13 /22 , டி. ஆர். ஜி வீதி பல்லடம் ரோடு தென்னம்பாளையம் திருப்பூர் - 641604

அமைப்பாளர் - **சலீம்** 11, சொர்ணபுரி லே-அவுட் கோம்பைத் தோட்டம் காங்கேயம் ரோடு திருப்பூர் - 641604

துணை அமைப்பாளர்கள் - உ. மனோஜ்குமார் 37, தாசில் சீனவாசபுரம் போலீஸ் மாரியம்மன் கோவில் எதிரில், கோர்ட் வீதி திருப்பூர் - 641 601 ஆர். யுவராஜ் 14, கரட்டாங்காடு 4 வது வீதி, தாராபுரம் ரோடு திருப்பூர் - 641 604 ஏ. ஆர். ஈ. விஷ்ணுபாலாஜி 13 /ஏ, செரிப் காலனி, க்ராஸ் ரோடு திருப்பூர் - 641 604 ப . பாலாஜி 2 /291, பாவடி வீதி இடுவம்பாளையம் திருப்பூர் - 641 யாசர் அராபத் 83 , டிமாண்ட் முதல் வீதி டூம் லைட் அருகில் பள்ளிவாசல் திருப்பூர் - 641 604

**தூத்துக்குடி வடக்கு மாவட்டம்**

**தூத்துக்குடி மாநகரம்**

தலைவர் - வி. நாகராஜன் 111-எல்/டி-2, கோமதிபாய் காலனி போல்பேட்டை தூத்துக்குடி

துணை தலைவர் - ரா. ஜேசு ராஜா தயான் 5/370 , மேட்டுபட்டி லூர்தம்மாள்புரம் தூத்துக்குடி - 1

அமைப்பாளர் - **ஜெ. ரூபஸ் அமிர்தராஜ்** 25/1, மாசிலாமணிபுரம் 3வது தெரு தூத்துக்குடி

துணை அமைப்பாளர்கள் - ஜெ. ரூபராஜா 1 ஜெ /2 ஏ, பிரையண்ட் நகர் 6 மேற்கு தூத்துக்குடி ஜெ.அந்தோணி செல்வ திலக் 50E/1, கிருபை காம்ப்ளக்ஸ் 1 முதல் தளம் போல்டன்புரம் 3 வது தெரு,தூத்துக்குடி அ. செல்வலட்சுமி 2 A /329, அம்மன் கோயில் தெரு மடத்தூர், தூத்துக்குடி ஏ. ஆர். அஜித் 2A/40 A , நடுத் தெரு மடத்தூர், தூத்துக்குடி அ. மணிகண்டன் 111/66/56, சக்தி விநாயகபுரம் தூத்துக்குடி என். பாலசுப்ரமணியன் 4/164/A9/2, ஆர். டி. எஸ். கார்டன் ஸ்டேட் பாங்க் காலனி தூத்துக்குடி

**கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்**

**நாகர்கோவில் மாநகரம்**

தலைவர் - செ. கனி (எ) சி. என். ஜெ. சுந்தரசாமி 223/22, ஆபிரகாம் தெரு புதுகுடியிருப்பு, நாகர் கோவில் கன்னியாகுமரி மாவட்டம்

துணை தலைவர் - மா. விஸ்வராஜன் 240 C கோபால் ரோடு வைத்தியநாதபுரம்,கோட்டார் அஞ்சல் நாகர் கோவில் கன்னியாகுமரி மாவட்டம்

அமைப்பாளர் - **ஐ. சகாய டெல்வர்** 11/1, பாம்பன்விளை அனந்தநாடார்குடி அஞ்சல் கன்னியாகுமரி மாவட்டம்- 629 201

துணை அமைப்பாளர்கள் - செ. பெருமாள் L 67/68, ஹவுசிங் போர்டு காலனி சரக்கல்விளை, இடலாக்குடி அஞ்சல் நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்- 629 002 சொ. சிவ கோடீஸ்வரன் 9 -109, பழவிளை பழவிளை அஞ்சல் நாகர் கோவில் கன்னியாகுமரி மாவட்டம் ஆ. ஜெயச்சந்திரா 16 ஏ/1ஏ-3, பூங்கா கிழக்கு தெரு நேசமணி நகர் நாகர் கோவில் கன்னியாகுமரி மாவட்டம் - 629 001 ச. நி. ட்ரிஜின் சகாய தனிஷ் 109/B 3, ரோக்காஞ் காம்பவுண்ட் மேல மறவன் குடியிருப்பு நாகர் கோவில் கன்னியாகுமரி ந. இராமதாஸ் 103, ஆசாரிமார் வடக்குத் தெரு கோட்டார் நாகர் கோவில் கன்னியாகுமரி மாவட்டம்

**ஈரோடு தெற்கு மாவட்டம்**

**ஈரோடு மாநகரம்**

தலைவர் - வெ. ரங்கநாதன் 148, கல்யாண சுந்தரம் வீதி சாஸ்திரி நகர் ஈரோடு - 638 002

துணை தலைவர் - சுசீலா அருட்செல்வன் B-51, சம்பத் நகர் ஈரோடு -638 011

அமைப்பாளர் - **சி. ரவீந்திரன்** 6/33, மேட்டுப்பாளையம் பேரோடு, சித்தோடு வழி ஈரோடு - 638 102

துணை அமைப்பாளர்கள் - A. புவனேஸ்வரி 65, சோழ நகர், எல்லப்பாளையம் ரோடு பெரியசேமூர் ஈரோடு -4 R. கவிதா 46-B, EB- நகர், மூலப்பாளையம் ஈரோடு - 2 S.வெங்கடேஷ் 11, எல்விபி நகர் கொங்கம்பாளையம் சித்தோடு அஞ்சல் ஈரோடு வட்டம் மானேக் ஷா 27/3, சாந்தான் கருக்கு இரண்டாவது வீதி சூரம்பட்டி, நால்வர் ரோடு ஈரோடு -9 சீனிவாசன் 161/2, பவானி மெயின் ரோடு சூர்யா நகர் சூரியம்பாளையம் ஈரோடு -638 005

**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்**

**காஞ்சிபுரம் மாநகரம்**

தலைவர் - தாங்கி K.பழனி எண். 2, பெரிய தெரு தாங்கி கிராமம் நாயக்கன்பேட்டை அஞ்சல் வாலாஜாபாத் தாலுக்கா காஞ்சிபுரம்

துணை தலைவர் - D. மணிமாறன் 19/5, மேல வீதி ஐய்யம்பேட்டை காஞ்சிபுரம்

அமைப்பாளர் - K P **சிவகுமார்** எண். 110, காமாட்சி நகர் வையாவூர் ரோடு (புத்தர் கோயில் அருகில்) கோனேரிக்குப்பம் காஞ்சிபுரம்

துணை அமைப்பாளர்கள் - C.கோவிந்தசாமி எண். 53 A, மின்நகர் 1 வது தெரு காஞ்சிபுரம் A.ரிஷ்வான் ஷெரிப் D5, பிளாக் J. C. கோர்ட் அப்பார்ட்மெண்ட்ஸ் இந்திரா அவென்யூ அசோக் நகர் காஞ்சிபுரம் V.பார்த்திபன் எண். 2/98, பள்ளிக்கூட தெரு செவிலி மேடு காஞ்சிபுரம் B.எழிலரசி எண். 86, மகாலிங்கம் நகர் நசரத்பேட்டை காஞ்சிபுரம் S.மஞ்சுகாந்த் எண். 16, விசாலாட்சி நகர் செவிலி மேடு காஞ்சிபுரம்

**சேலம் மத்திய மாவட்டம்**

**சேலம் மாநகரம்**

தலைவர் - K. குப்புசாமி 23/4 A, 7 வது க்ராஸ் மரவனேரி சேலம் - 7

துணை தலைவர் - S.P. வெங்கடேஷன் 35/66, வேலுபிள்ளை தெரு தாதகாப்பட்டி சேலம் - 6

அமைப்பாளர் - V. C. **சீனிவாசன்** 1Aதர்மநகர் மெயின் ரோடு சூரமங்கலம் சேலம்

துணை அமைப்பாளர்கள் - T. விஜயகுமார் 75, மேற்கு தெரு 2 குமாரசாமிப்பட்டி சேலம் வஸ்தாத் இரா. கிருஷ்ணன் 69/40, திருநாவுக்கரசர் தெரு கிச்சிப்பாளையம் சேலம் P. நாகராஜ் 6, சுந்தரம் காலனி ஜவகர் மில் அருகில் சேலம் - 05 க. யுவராஜ் 541/5, பாரதியார் தெரு அழகாபுரம் பெரியபுதூர் சேலம் K.தமிழரசன் 28, பிள்ளையார் நகர் 2 வது தெரு, கோர்ட் ரோடு சேலம் - 7

**தஞ்சை மத்திய மாவட்டம்**

**தஞ்சை மாநகரம்**

தலைவர் - ஆர். அன்பழகன் 177/49, ராஜன் ரோடு முகப்பு சீனிவாசபுரம் தஞ்சை

துணை தலைவர் - வி. வித்யா 1660, மேலவீதி தஞ்சாவூர்

அமைப்பாளர் - **ஜெ. மணிகண்டன்** காந்திபுரம் ரெட்டிப்பாளையம் ரோடு சீனிவாசபுரம் தஞ்சை

துணை அமைப்பாளர்கள் - கே. அஸ்வின் 18 பி, ஒத்தைவார்க்காரத் தெரு டபீர்குளம் ரோடு கீழவாசல் தஞ்சை எஸ். கோபிநாத் 7051 பி, கந்தபொடிக்காரத் தெரு கீழவாசல் தஞ்சை ஆர். நளினி 68, வண்டிக்காரர் தெரு தஞ்சை ஹச். உமர்முக்தர் 2481, பூக்காரவிளார்சாலை தஞ்சை ப. சுரேஷ் குமார் 18, தென்கரை சேவப்பநாயக்கன்வாரி தஞ்சை

**தஞ்சை வடக்கு மாவட்டம்**

**கும்பகோணம் மாநகரம்**

தலைவர் - தி. மா. வைத்தியநாதன் 35, பாணாதுறை வடக்கு வீதி கும்பகோணம்

துணை தலைவர் - ஏ. முகமது சம்சுதீன் 504, பாரதி நகர் தெற்கு கும்பகோணம்

அமைப்பாளர் - **து. விமலன்** 49, பாணாதுறை தெற்கு வீதி கும்பகோணம்

துணை அமைப்பாளர்கள் - கே. சாரங்கபாணி நெ. 1/27, காந்தியடிகள் சாலை கும்பகோணம் பி. அண்ணாதுரை 4, ஏ. ஆர். ஆர். ரோடு ஏ. ஆர். ஆர். சீவல் கம்பெனி அருகில் கும்பகோணம் ஜான் கென்னடி காரைக்கால் மெயின் ரோடு கும்பகோணம் K . அருள் 87E, கம்பன் நகர் மாதுளம்பேட்டை கும்பகோணம் எல். கஸ்போராவ் ஆனந்த் 71 ஈ, தூக்காம் பாளையத் தெரு 2 வது சாகுட் நகர் கும்பகோணம் ராஜராஜ சோழன் மோதிலால் தெரு கும்பகோணம் சு. வேதநாயகம் ரஜினிகாந்த் 8-30, அன்னை சிவகாமி நகர் செம்போடை தெரு கும்பகோணம்

**கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்**

**ஒசூர் மாநகராட்சி**

தலைவர் - எம் பாஸ்கரன் 59, பிளாசம் விலா எம். எம். நகர் ஒசூர் கிருஷ்ணகிரி - 635 109

துணை தலைவர் - சி. ஜெயசங்கர் 105, பி பிளாக், தாளியா அப்பார் ட்மென்ட் தின்னூர், ஒசூர் கிருஷ்ணகிரி - 635 109

அமைப்பாளர் - **எம். மாதேசப்பா** 3/898, சமாதானபுரம் சிப்காட் அவுசிங் காலனி தர்கா, ஒசூர் கிருஷ்ணகிரி - 635 109

துணை அமைப்பாளர்கள் - டி. சோமேஷ்கவுடா 34, திலகர் பேட்டை , ஒசூர் கிருஷ்ணகிரி - 635 109 ஆர். வெங்கடேசன் 71, எ /w -39, தேர் பேட்டை ஒசூர் கிருஷ்ணகிரி - 635 109 எம். சந்திரசேகர் 3 /13 ஏ, சுதர்சன் காம்ப்ளக்ஸ் ஏரி தெரு, ஆவலப்பள்ளி ஒசூர் கிருஷ்ணகிரி - 635 109 அபிதா 154/3, 2 வது தளம் கோர்ட் காம்ப்ளக்ஸ் எதிரில் ஒசூர் கிருஷ்ணகிரி - 635 109 வி. ஜான்சி ராணி லட்சுமி பாஸ் ராஜீவ் நகர், பாகலூர் அஞ்சல் ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி

**திருச்சி தெற்கு மாவட்டம்**

**திருச்சி கிழக்கு மாநகரம்**

தலைவர் - M. R. லிங்கம் 86, ஹைவேஸ் காலனி சுப்ரமணியபுரம் திருச்சி - 20

துணை தலைவர் - T. செந்தில் குமார் 32-C, கீழதேவதானம் திருச்சி - 02

அமைப்பாளர் - M. **பன்னீர் செல்வன்** 42/1, ஜீவா தெரு கொட்டப்பட்டு திருச்சி - 04

துணை அமைப்பாளர்கள் - C. முனீஸ்வரன் 14, சீனிவாச நகர், 3 வது தெரு, அரியமங்கலம் திருச்சி - 10 ம. ஜெகதீஸ்வரன் 119, குடியான தெரு நொச்சிவயல் புதூர் திருவெறும்பூர் திருச்சி - 13 அ. சுமதி 7/39, சத்தியமூர்த்தி நகர் இ. பி. ரோடு திருச்சி - 08 G. பிரபாகரன் 15/19, ஆசாரி தெரு முதலியார் சத்திரம் திருச்சி - 01 N.கிருஷ்ணா 60, பாலக்கரை மெயின் ரோடு திருச்சி - 08

**திருச்சி மத்திய மாவட்டம்**

**திருச்சி மேற்கு மாநகரம்**

தலைவர் - M.S.V. வீரமணி க. எண். 17A , தியாகராஜ நகர் உறையூர் திருச்சி - 03

துணை தலைவர் - G . மணி சுந்தரம் 41/3, ஆபிசர் காலனி புத்தூர், திருச்சி - 17

அமைப்பாளர் - C . **அந்தோணிராஜ்** 18, பாலாஜி அவென்யூ 4 வது குறுக்கு தெரு பழைய கரூர் ரோடு மேலசிந்தாமணி திருச்சி - 02

துணை அமைப்பாளர்கள் - J .சுரேஷ் பாபு 8/12, நியூ காலனி எ. புதூர் திருச்சி - 12 Bதாவூத் உசேன் 6/1 , பணிக்கன் நாடார் தெரு J. B.மன்ஜில் கம்போஸ் பின்புறம் உறையூர், திருச்சி L. பிச்சைமணி 82/26, காந்திபுரம் தில்லை நகர், திருச்சி - 18 S . ஹரிஹரன் 35, இரண்டாவது தளம் ரோகிணி இரமணியம் அடுக்குமாடி குடியிருப்பு 18, மேல அடையவளஞ்சான் வீதி திருவரங்கம் திருச்சி J.மதியழகன் 10, 2 வது தெரு மாருதி நகர் கருமண்டபம் திருச்சி - 01

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.3.2024

**என்.ஆர்.இளங்கோ**
செயலாளர்,
தி.மு.க. வழக்கறிஞர் அணி.


TIRUPPUR CITY MUNICIPAL CORPORATION
திருப்பூர் மாநகராட்சிக்கு ரூ.75 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டிடம் அமைப்பதற்கும், பெருமாநல்லூர் சாலையில் நல்லாற்றில் ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் பாலங்கள் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்த கழகத்தலைவர்,
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!
மாண்புமிகு. கே.என்.நேரு
கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர்
மாண்புமிகு. மு.பெ.சாமிநாதன்
தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்
மாண்புமிகு. என்.கயல்விழிசெல்வராஜ்
ஆதித்திராவிடர் நலத்துறை அமைச்சர்
கழக மகளிர் அணி துணைச் செயலாளர்
உயர்திரு. க.செல்வராஜ் MLA
திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர்
திருப்பூர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
திரு. டி.கே.டி.மு.நாகராசன்
திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர்
மாண்புமிகு. ந.தினேஷ்குமார் MIB
மேயர் - திருப்பூர் மாநகராட்சி
திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர்

## சமையல்காரரின் மகள் சமைக்கும் நீதி!



கல்வி ஒன்றே அழியாத செல்வம், என்ற வள்ளுவரின் வாய்மொழி எத்தனை உண்மை என்பதை சமீபத்தில், உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற நிகழ்வொன்று உணர்த்தியுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் சமையல்காரராகப் பணிபுரிந்து வருபவர் அஜய்குமார் சமல். இவருடைய மகள் பிரக்கியா, சட்ட மேற்படிப்பு படிப்பதற்காக அமெரிக்காவில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு உதவித்தொகையோடு தகுதி பெற்றுள்ளார்.

சமீபத்தில் அமெரிக்காவில் இரண்டு பல்கலைக் கழகங்களில் முதுகலைச் சட்டம் பயில பிரக்கியாவுக்கு அழைப்பு வந்த நிலையில், தற்போது அமெரிக்காவில் முதுகலைச் சட்டம் பயில்வதற்கான உதவித் தொகையையும் பெற்றுள்ளார்.

இதையறிந்து உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி சந்திரசூட் உள்ளிட்ட நீதிபதிகள், மாணவியை நேரில் அழைத்து, புத்தகம் கொடுத்து 'எங்கள் அனைவருக்கும் பெருமையாக உள்ளது' என்று பாராட்டியும் இருக்கிறார்கள். மாணவியின் பெற்றோருக்குப் பொன்னாடை போர்த்தி மரியாதை செய்தார்கள். எந்தத் தடைகளையும் தாண்டுவதற்கு கல்வி சிறந்த ஆயுதம் என்பதை நிரூபித்திருக்கிறார் பிரக்கியா. ஊர்க் குருவிகள் பருந்தாகும் காலமிது!

## ஃப்ளாஷ்பேக்



ஹெச்.ஹிதாயத்துல்லாஹ்



### வழக்கு நிதி!

1977-ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று தந்தை பெரியார் அவர்களது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் மல்லிப்பட்டினம் கிளைக் கழகத்தில் உள்ள கள்ளிவயல் தோட்டத்தில் கழகக் கொடியேற்று விழா நடைபெற்றது. அந்த நிகழ்வில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பங்கேற்றுக் கொடியேற்றினார். அப்போது, என்னுடைய சித்தப்பா மா.மு.முகமது மீராசா அவர்கள் கட்சி நிதியும், மிசா வழக்கு நிதியும் தலைவர் அவர்களிடம் வழங்கினார். அப்படியான சூழலில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**–ஹெச்.ஹிதாயத்துல்லாஹ், முன்னாள் ஒன்றிய பிரதிநிதி, மல்லிப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தொழிற்சங்கப் பொறுப்பு!

1961-ஆம் ஆண்டு, கழகத்தின் மூன்றாவது பொது மாநாடு ஜூன் 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை திருப்பரங்குன்றத்தில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணாவை வரவேற்க, மதுரை மாநகரமே திருவிழாக் கோலம் கண்டிருந்தது. அந்த மாநாட்டில்தான், கழகப் பிரச்சாரத்துக்குத் தனது முழுநேரத்தையும் செலவிடுவதற்காக, தொழிற்சங்கச் செயலாளர் பதவியிலிருந்து அண்ணாவின் ஒப்புதலுடன் விலகினார் பேராசிரியர்.

## சீரணி → இளைஞர் அணி

2

**ந.வினோத்குமார்**

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...**

ஓவியம் : ரவி பேலட்



# மக்களிடம் செல்!

*அன்புள்ள தம்பி,*
*மக்களிடம் செல்,*
*அவர்களுடன் வாழ்,*
*அவர்களிடமிருந்து கற்றுக்கொள்,*
*அவர்களை நேசி,*
*அவர்களுக்குச் சேவை செய்,*
*அவர்களுடன் சேர்ந்து திட்டமிடு,*
*அவர்களுக்குத் தெரிந்தவற்றிலிருந்து தொடங்கு,*
*அவர்களிடம் இருப்பதை*
*வைத்துக் கட்டமைப்பு செய்*

நாட்டுக்காக உழைக்க வேண்டும் என்று விரும்பி, நம் கழகத்துக்குள் வரும் ஒவ்வொரு உடன்பிறப்புக்கும் பேரறிஞர் அண்ணா இட்டுச் சென்ற அன்புக் கட்டளைதான் இது. அரசியலுக்கு வருபவர்கள் மட்டுமல்ல... பொதுநலமே உயிர்மூச்சாகக் கொண்டுள்ள ஒவ்வொரு தனிமனிதரும், ஒவ்வொரு இயக்கமும் கற்றுக்கொள்ள வேண்டிய பாலபாடம் இது. பின்பற்ற வேண்டிய குணபாடம் இது.

மக்கள் நலம், மாநில வளர்ச்சி என்பவையெல்லாம் தனிநபரின் இலக்குகள் அல்ல. அவை ஊர்கூடித் தேர் இழுக்கும் முயற்சி. இந்த முயற்சியில் அரசு மட்டுமே எப்போதும் தனது பங்கைச் செலுத்த வேண்டும் என்று நினைப்பது சரியல்ல. மக்களும் தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டும். அப்போதுதான் முன்னேற்றம் கைகூடும்.

எடுத்துக்காட்டாக, ஊரில் டெங்கு ஒழிய வேண்டுமென்றால், அரசு மட்டுமே கொசு மருந்து அடித்து ஊரைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று நினைப்பது தவறு. முதலில், நம் வீட்டையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். வீட்டையும் ஊரையும் சுத்தமாக வைத்திருப்பது என்பது நாட்டை முன்னேற்றுவதன் அடிப்படைப் பணி. இதுபோன்ற அடிப்படைப் பணிகளில் முதலில் இளைஞர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் அண்ணாவால் தொடங்கப்பட்டதுதான் 'சீரணி இயக்கம்'.

1967-இல் சீரணி என்ற தன்னார்வக் குழுவை அண்ணா தொடங்கி வைத்தார். தி.மு.க. தொடங்கப்பட்ட போது, தி.மு.க.வையே தீவிரவாத இயக்கம் என்று சொன்னவர்கள், சீரணியும் ஒரு படையோ என்று சந்தேகம் கிளப்பினர். அதற்குப் பதிலளித்த அண்ணா, "சீரணியின் நோக்கம் உழவும் தொழிலும் வளர உறுதுணையாக நிற்றல், கல்வியறிவும் பொது அறிவும் வளர வகைசெய்தல், துப்புரவுப் பணி மேற்கொள்ளல், தீண்டாமைக் கொடுமைகளை அகற்றுதல், சமூகக்கேடுகளை அன்புவழியில் களைதல், திக்கற்றவர்களுக்குத் துணை புரிதல்! வாலிபர்கள், மாணவர்கள், பெண்கள், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், எந்தக் கட்சியையும் சாராதவர்கள், பல்வேறு வகுப்பினர், வகுப்புகளே வேண்டாம் என்ற முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் அனைவரும் இதில் சேரலாம். ஊதியம், பயன், பணி உயர்வு கோராத ஒருவிதப் படை ஒவ்வொரு நாட்டுக்கும் தேவை. அப்படியான படையே இது" என்றவர், காந்தியைப் போல தூய்மைப் பணியையே போதித்தார். போதித்தது மட்டுமல்ல, தன்னுடைய மனைவி உட்பட கழகத்தினர் பலரும் தங்கள் குடும்பத்தோடு இதில் சேர்ந்தார்கள்.

தலைவனுக்கு அழகு போதிப்பது அல்ல. தான் போதிப்பதைத் தானே பின்பற்றி மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருப்பது. அதன் அடிப்படையில், களப்பணி என்று வந்துவிட்டால், கழகத்தினர் எப்போதும் முன்வரிசையில் நின்றார்கள். அந்தச் சீரான செயல்பாட்டை, சீர்மிகு இளைஞர்களின் பங்களிப்பை, சீரணி வரலாற்றிலிருந்து தொடங்கலாம்.

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

2

**கோவி.லெனின்**

**"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."**

# மதுவிலக்கும் மது விற்பனையும்!

***தி.மு.க. ஆட்சியின் சாதனை டாஸ்மாக்தான் என்று பா.ஜ.க, நாம் தமிழர் கட்சி போன்ற கட்சிகள் விமர்சனம் செய்கின்றனவே?***

*முதன்மை எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வால் தி.மு.க.வை நோக்கி இப்படி விமர்சனம் செய்ய முடியாது. ஏனென்றால், டாஸ்மாக் உருவாவதற்குக் காரணம் அ.தி.மு.க ஆட்சிதான் என்பது அவர்களுக்குத் தெரியும். 1983-ஆம் ஆண்டில் மே 23-ஆம் நாள் டாஸ்மாக் நிறுவனத்தை ஆரம்பித்தவர், அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர்., மதுபான வகைகளை அரசே கொள்முதல் செய்வதற்காக, அதனை ஆரம்பித்தார். கொள்முதல் செய்த மதுபானங்களைத் தனியார் சில்லரை மதுபானக் கடைகள் வாங்கி விற்பனை செய்து வந்தன. 2003-ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாள் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா, தனியார் சில்லரை மதுபானக் கடைகளுக்குப் பதில், அரசே டாஸ்மாக் மூலம் குவார்ட்டர், ஆஃப், ஃபுல் பாட்டில்களை விற்பனை செய்யும் என உத்தரவிட்டுச் செயல்படுத்தினார்.*

*ராஜாஜி, காமராஜர் ஆட்சிக்காலம் முதல் பேரறிஞர் அண்ணா ஆட்சிக்காலம் வரை தமிழ்நாட்டில் மதுவிலக்கு நடைமுறையில் இருந்ததால் மதுக்கடைகள் இல்லை. ஆனால், மதுவே இல்லை என்றோ, தமிழ்நாட்டில் குடிகாரர்களே இல்லை என்றோ சொல்லவே முடியாது. காமராஜர் ஆட்சி உட்பட ஒவ்வொரு ஆட்சியிலும் கள்ளச்சாராய உயிர்ப்பலிகள் ஏற்பட்டன. அண்டை மாநிலங்களான ஆந்திரா, புதுச்சேரியிலிருந்து தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகளில் மது விற்பனை நடந்து வந்தது. 'பர்மிட்' வாங்கி உயர் ரக மதுபானங்களை அருந்தியவர்களும் உண்டு. இந்த நிலையில்தான், 1971-ஆம் ஆண்டில் கலைஞர் மதுவிலக்கை ரத்து செய்ய முடிவெடுத்தார்.*

*இந்தியா முழுவதும் மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் அல்லது மதுவிலக்கை அமல்படுத்தும் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்பது கலைஞரின் கோரிக்கை. ஒன்றிய அரசு அதை ஏற்க முன்வரவில்லை. பிற மாநிலங்களில் மதுக்கடைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டிய கலைஞர், "கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்துக்குள் கொளுத்தப்படாத கற்பூரமாக தமிழ்நாடு எத்தனை நாளைக்குத்தான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்?" என்று சட்டப்பேரவையில் தெரிவித்தார்.*




**அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா, தனியார் சில்லரை மதுபானக் கடைகளுக்குப் பதில், அரசே டாஸ்மாக் மூலம் குவார்ட்டர், ஆஃப், ஃபுல் பாட்டில்களை விற்பனை செய்யும் என உத்தரவிட்டுச் செயல்படுத்தினார்.**

*நிதி நிலை கருதி, தவிர்க்க இயலாத சூழலில் மதுவிலக்கை ஒத்திவைப்பதாக அறிவித்தார். மதுக்கடைகள் திறக்கப்பட்டன. அப்போது எம்.ஜி.ஆரும் தி.மு.க.வில்தான் இருந்தார். மதுவின் தீமைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லவேண்டிய அரசின் பிரச்சாரக் குழுவுக்கு அவர்தான் பொறுப்பு வகித்தார். கலைஞரால் ஒத்திவைக்கப்பட்ட மதுவிலக்கு, அவர் ஆட்சிக் காலத்திலேயே 1974- ஆம் ஆண்டில் மீண்டும் நடைமுறைக்கு வந்தது. கள், சாராயம் உள்ளிட்ட மதுக்கடைகள் கலைஞர் ஆட்சியிலேயே மூடப்பட்டன.*

*1977-ஆம் ஆண்டு முதலமைச்சரான எம்.ஜி.ஆர், 'என் தாய் மீது ஆணையாக மதுவிலக்கை ரத்து செய்ய மாட்டேன்' என்றார். ஆனால், கூட்டுறவு அங்காடிகளில் 'பர்மிட்' முறையில் மது விற்பனைக்கு அனுமதியளித்தார். 21-3-1981 அன்று கள், சாராயக் கடைகளையும் திறந்தார். மது விற்பனைக்காக டாஸ்மாக் நிறுவனத்தைத் தொடங்கினார் என்பதுதான் உண்மை வரலாறு.*

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

418

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131